# திராவிடநாடு

11—5—58 | வார வெளியீடு | விலை 16காசு


## தனி உலகம் நீயன்றோ?

(இரா. வேங்கடபதி)

பால்நிலவே! பனிமலரே! பழமே! தேனே!
    பார்மீதில் பழமைக்கும் பழமை ஆனோய்!
காலமென்னும் பெருவெள்ளம் புரட்டி ஓய
    கால்பெயரா தமர்ந்தொளிரும் கனியே! கண்டே
ஓலமிடும் சிறுமனத்தை ஓயா தூக்கி
    ஒருநொடியும் அகலாது ஒண்டி நின்று
தாலாட்டுப் பாடுகின்ற தமிழே! தாயே!
    தனிஉலகம் நீயன்றோ? தரணி மீதில்.

கார்உலவும் அகல்வானைத் தழுவும் தென்றல்
    கற்கண்டுத் தூள்மழையில் களித்தல் போல
மார்விம்ம பெருமிதத்தில் மகிழ்ச்சி கொண்டு
    மாத்தமிழே! மணிவிளக்கே! மலர்ந்த கண்ணே!
ஊர்தோறும் உன்குரலே ஒலிக்கக் கேட்பேன்
    உலகமெலாம் உன்புகழே உயரக் காண்பேன்
தார்வேந்தர் மணிமுடியில் தரித்த பொன்னே!
    தனிஉலகம் நீயன்றோ? தரணி மீதில்.

கற்பனையில், காண்கின்ற கனவில், நெஞ்சம்
    களிக்கின்ற நனவுகளில், கருவாய்த் தோன்றி
பொற்புடனே பொலிகின்ற போக ஊற்றே!
    பொய்உலகில் ஒருண்மை உண்டு யென்றால்
அற்புதமே! ஆருயிரே! அழகே! அன்பே!
    அதுஒன்றும் நீயேதான் அட்டி இல்லை
பற்பலவாம் கலையின்பம் பயக்கும் தாயே!
    தனிஉலகம் நீயன்றோ? தரணி மீதில்.

# வடக்கு வேறு! தெற்கு வேறு!!

சில ஆண்டுகளுக்கு முன்பு "எம். ஏ." படித்த மாணவர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன் நான். வட இந்தியப் பல்கலைக் கழகம் ஒன்றில், சரித்திர வகுப்பில், பட்டம் பெற இருந்தார் அவர். இந்திய இலக்கியங்களைப்பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது; அதிலிருந்து இந்திய மொழிகளிலேயுள்ள கவிதைகளைப்பற்றிப் பேசலானோம், சிறந்த கவிதைகளை சமஸ்கிருதம், இந்தி, உருது முதலியவைகளிலும்; தாகூரின் வங்காள மொழியிலும்தான் காண முடியும் என்று தெரிவித்தார், அவர்.

"மதராசிகள் இருக்கிறார்களே, அவர்கள் சொன்னதை எழுதுபவர்களாகயிருக்கலாம்; ஆனால், கவிதைக்கும் அவர்களுக்கும் வெகு தூரம்" என்றார் அம் மாணவர்.

"கவி பாரதியைப்பற்றி கேள்விப்பட்டதுண்டா?" என்றேன். அவர் கேள்விப்பட்டதேயில்லையாம்.

"வள்ளத் தோலைப் பற்றி......?" என்று கேட்டேன். "ஏதோ மெட்ராசி டான்சுகளில் ஒருவகை டான்சு தெரிந்தவர் என்று கேள்விப்பட்டது போல் இருக்கிறது" என்றார்.

"மெட்ராசி மொழி"யில் எழுதப்பட்ட நல்லகவிதைகளைப்பற்றி தான் கேள்விப்பட்டது கிடையாது என்றும் அவர் சொன்னார்!

"மெட்ராசி மொழியா? அப்படியொரு மொழி கிடையாது" என்றேன்.

"என்னது? மெட்ராசி மொழியில்லையென்றால் மெட்ராஸ் மாகாணத்திலிருப்பவர்கள் என்ன மொழி பேசுகிறார்கள்?" என்றார். அப்போது, ஆந்திரமும், கேரளமும் உருவாகவில்லை.)

தெற்கில் பேசப்படும் பெரிய மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று நான் தெரிவித்தேன்!

"அப்படியா? இப்போதுதான் கேள்விப்படுகிறேன்!" என்றார் அவர். மெட்ராசிகள், 'மெட்ராசி' எனும் மொழியைத்தான் பேசுவார்கள் என்பதாக அவர் இது நாள்வரையில் நினைத்துக்கொண்டிருந்திருக்கிறார்!!

**சில ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது. இப்போதும், இந்த நிலைமை, மாறிவிட்டதாகக் கருதுவதற்கில்லை.**

"எம். ஏ." படிக்கும் இவரைவிட, இன்னும் மோசமானவர்கள் வடக்கே இருக்கிறார்கள் என்றால், தென்னாட்டு வாசகர்களுக்கு பேரதிர்ச்சியாயிருக்கும். ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலும் இருக்கும் பெரும்பான்மையான மக்களுக்கு, "மெட்ராசி" என்று எம்மொழியும் இல்லை என்பது தெரியாதது மட்டுமல்ல, தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் தாழ்மையான எண்ணம் படைத்தோராகவுமே உள்ளனர். விந்திய மலைக்கு அப்பால், கறுப்புடல் படைத்த திராவிடர்கள் வாழும் இருண்ட நாடு இருப்பதாகவும், இப்பால் ஆரிய கலாச்சாரமும் நாகரிகமும் இருப்பதாகவுமே எண்ணியவாறு உள்ளனர். எப்படி அவர்களுக்கு இந்த மனோபாவம் ஏற்பட்டது என்பதை நானறியேன்! ஆரியர்கள் வந்தகால முதல் இருக்கிறதோ, அல்லது டில்லியை இந்தியாவின் தலைநகராக்கி வடக்கேயே, அரசியல் கௌரவமும் அதிகாரமும் இருக்கும்படி செய்யப்பட்ட பிறகு உண்டானதோ, புரியவில்லை. அது எப்படி இருந்தாலும், நமது நாட்டுக் கலாச்சாரம் பற்றி, நல்லதோர் தெளிவு பெரும்பாலோருக்கு இல்லை என்பது மட்டும் உண்மை.

ஆங்கிலக் கல்வி முறையின் காரணமாக, சரிவரப் படித்த இந்தியன்கூட, இங்குள்ள கலைகளையும் இலக்கியங்களையும் பற்றி சிரத்தைகொள்ளவில்லை. ஷேக்ஸ்பியரைப் பற்றித் தெரிந்த அளவுக்கு காளிதாசனை அறியார்கள்; டென்னிசனைப்பற்றி அறிந்த அளவுக்கு துளசிதாஸ் புரியாது இவர்களுக்கு; பிரெஞ்சு ஓவியங்களின்

(13-ம் பக்கம் பார்க்க)

வடக்கும் தெற்கும், இந்தியா என்கிற துணைக் கண்டத்தின் இருபகுதிகள், கலாச்சார மாறுபாடு கொண்டவை என்று தி. மு. க. சொல்லும்போது, "இல்லை! இல்லை!! இந்தியா ஒன்றே", என்கிற பல்லவியைப் பாடுவோர் இருக்கிறார்கள். நமக்கு, தக்க பதில்தர இயலவில்லையென்றாலும், "இந்தியா ஒன்றே" என்று விடாப்பிடியாக இன்னும் சொல்லி வருகிற அவர்கள், இக்கட்டுரையைப் படிக்கவேண்டுகிறோம். சென்னையில் வெளியாகும் "சுயராஜ்யா" எனும் ஆங்கில இதழில் அக்மது அப்பாஸ், தீட்டியிருப்பதாகும் இது. அப்பாஸ், சிறந்த எழுத்தாற்றல் உள்ளவடவர்! உலகப்புகழ் பெற்றவர்!! அவர், 'நமது குரல்' ஒலிப்பதற்கான காரணங்களை உணர்ந்து இருப்பது, கட்டுரையில் விளங்கும். வடநாட்டுக் கலாச்சாரத்துக்கும் தென்னாட்டுப் பண்பாட்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமைகளை நன்கு உணர்ந்திருக்கிறார் அவர்! எனினும், எல்லோரையும் போல அவரும் "ஒன்று;' என்கிற ஆசையை வலியுறுத்தியுள்ளார். வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலே ஒரு கலாச்சார சங்கம் வேண்டுமென விரும்புகிறார். ரஷ்யா அல்லது சீனாவைப்போல வடக்கும், திராவிடநாடும் இருக்க வேண்டும் என்று அவர் ஒத்துக் கொள்வாரானால், நமக்கும் சம்மதம் தான்! கலாச்சார தொடர்பை வளர்ப்பதில், நமக்கும் ஆசையுண்டு. திராவிடமும், எஞ்சிய பாரதமும், இன்றுள்ள ரஷ்யா—இந்தியா போல வாழலாம்! ஆனால், வடவர் ஆதிக்கமும், வடவரின் பிடியும் அகல வேண்டும்!! நட்பும் நேசமும் பெருகி வாழ்வதில் நமக்கு ஆட்சேபணையில்லை. சுரண்டலும், ஆதிக்கமும் ஒழிந்து தனியரசு மலர்ந்திடின், ரஷ்யாவும் இந்தியாவும் இன்று பரிமாறிக்கொள்வதுபோல பல கலாச்சார குழுக்கள் இங்கு வளரவும்—நாம் அனுப்பவுமான சகல அன்புவழிக்கும் நாம்தயார்.

# ஐந்து நாட்கள்

லர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [11-5-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 43

இந்த ஐந்து நாட்களும் ஒரு பாடத்தை, உணர்த்துகின்றன.

இந்திய உபகண்டத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதையும், நேரு அவர்களுக்குப் பிறகு கலகலத்துவரும் காங்கிரஸ் எந்தக் கதியை அடையும் என்பதையும், இந்த ஐந்து நாட்களும் தெளிவாக்கிவிட்டன.

விலகி ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறேன்! என்று நேரு அவர்கள் விடுத்த அறிக்கையால், நாட்டிலேற்பட்ட பரபரப்பும் பதைபதைப்பும், ஐந்து நாட்கள் நீடித்தன. அதற்குப் பிறகு, "வழக்கம்போல்" ஆயிற்றே ஒழிய, எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

காங்கிரஸ் கட்சியில் பெரும் பொறுப்பு வகிக்கும் சத்யநாராயண் சின்கா என்பவர், உருக்கத்தோடு சொன்னாராம், "நேரு அவர்களே! உங்களை விடுவிக்க நாங்கள் தயாராயில்லை. ஏனெனில், நாட்டின் தலைவிதி உங்களோடு சேர்த்துப் பின்னப்பட்டிருக்கிறது," என்று. பல காங்கிரஸ்காரர்களும், நாடாளும் பொறுப்பிலிருப்போரும் இதே போலவே சொல்லியிருக்கின்றனர்.

இதனை மறுப்பதற்கில்லை! நாட்டின் 'விதி' நேருவோடு பிணைக்கப்பட்டிருப்பதால்தான், உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி, "......நேருவுக்குப் பின்?", என்கிற ஒரு கேள்வி அடிக்கடி எழும்பி வருகிறது. அந்தக் கேள்விக்கான பதிலையே, இந்த ஐந்து நாட்களும், தெளிவாக்கியிருக்கின்றன.

'பூஜா மனோபாவம்', இந்த உபகண்டத்தின் நீண்ட நாளைய வியாதி! காந்தியடிகளுக்குப் பிறகு, காங்கிரசில், அந்த இடத்தையும், நல்லதொரு செல்வாக்கையும் நேரு ஒருவர்தான் பெற்றிருக்கிறார். அவரால்தான், கேரளத்துக் காங்கிரசாரையும் காஷ்மீரத்து பக்ஷி குலாமையும், கட்டுப்படுத்த முடியும். கோடிக்கணக்கான மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஒரு சக்தி, அவர் ஒருவருக்குத்தான் இருக்கிறது.

"நான் விலகிவிட்டால் என்ன ஆகும்? யோசித்துப் பார்க்காமலில்லை நான்! அப்போது ஏற்படக்கூடிய விளைவுகள், என் கண்முன்னே தெரிந்தன. எனவே, இப்போது விலகினாலும், மீண்டும் இதே இடத்துக்கு நான் வந்து சேரவேண்டிய கட்டம் ஏற்படும் என்பதை நான் யூகிக்காமலில்லை. எனினும் இப்போதுள்ள சூழ்நிலையில், கொஞ்ச நாளைக்காவது நான் 'சாதாரணமான'வனாக யிருப்பதே, என் மனதுக்குச் சாந்தி தரும் என நினைக்கிறேன்."

நேரு, அவர்கள், ஓய்வு பெறப் போவதாக வெளியிட்டபோது, சொன்ன சொற்கள் இவை! தான் விலகிடின், அரசிலும் கட்சியிலும் தனக்குள்ள பொறுப்பைத் தளர்த்திக் கொண்டிடின், என்னென்ன ஏற்படும் என்பதை அவரும் உணராமலில்லை. நிச்சயம், அவரைத் தவிர வேறு யாராலும், யாரையும் எதனையும் கட்டுப்படுத்தும் வல்லமை கிடையாது. அதனாலேயே, காங்கிரஸ்காரர்கள் கலங்கினர்—என்ன ஆகுமோ என்றஞ்சினர்—ஐந்து நாட்களும் அகில இந்தியா முழுமையும் ஒரு அவல நிலையை ஏற்படுத்தின. இப்போது பயமும் பரபரப்பும் போய்விட்டது—நேரு அவர்கள் தனது இடத்திலிருப்பதாகச் சம்மதித்துவிட்டார்! ஆனால், "நேரு அவர்களுக்குப் பிறகு...?" என்ற கேள்விக்கு, விடை கிடைக்கவில்லை—விடை கிடைக்காது, ஏனெனில், நேருவோடுதான் நாட்டின் தலைவிதி யிருக்கிறது, என்று காங்கிரஸ்காரர்களே கருதுகிறார்கள்!!

நேரு அளவுக்குச் செல்வாக்கும், தன்னலமற்ற தன்மையும் உள்ளோர் காங்கிரஸ் கட்சியில் உள்ளார்களாவெனின், ஐயம்தான். ஒருகாலத்தில், தேசம், தியாகம் என்கிற தாரக மந்திரத்தைச் சபித்த வண்ணம், ஏதோ ஒரு புனித காரியத்திலிறங்கியிருக்கிறோம், மாடுமனை போனாலும் மக்கள் சுற்றத்தை இழந்தாலும் அந்தப் புனிதப் போருக்குத் தம்மைத் தியாகம் செய்வதே மேல் என்கிற உணர்ச்சி, காங்கிரசில் இருந்தது. அந்த உணர்ச்சி போய்விட்டது, என்று நாமல்ல, நேரு அவர்களே சொல்கிறார்.

"அந்த உணர்ச்சி போய்விட்டது. பெரிய தலைவர்களாயிருப்போருக்கே போய்விட்டது. மந்திரிப் பதவிக்கு வேட்டையாடுவதும், சுயநலத்தைப் பெரிதாக எண்ணுவதுமே மலிந்துவிட்டது. அது மட்டுமல்ல, இவைகளை நிறைவேற்றிக்கொள்ள கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடினும்கூடப் பரவாயில்லை என்று கருதுகிறார்கள்."

பெரிய தலைவர்கள்— பதவி வேட்டை கீழ்த்தரம்—இந்த சொற்கள், இன்றுள்ள காங்கிரசைப் பற்றிய அருமையான படப்பிடிப்பாகும். அந்தளவுக்கு, நேரு அவர்களின் கண்ணெதிரிலேயே கட்சி கெட்டிருக்கும்

போது, பிறகு யார் இருக்கிறார்கள்—பதவிவேட்டையைத் தடுக்க!! இழிந்தரமான சுபாவத்தைப் போக்க!!

"இப்போதுள்ள சூழ்நிலை" என்கிறார் நேரு. நாட்டில் வளர்ந்து வரும் மாற்றுக் கட்சிகளின் செல்வாக்கும், தனது கட்சிக்குள் அன்றாடம் ஏற்பட்டு வரும் சீரழிவும், அவர் மனதைப் பெரிதும் தாக்கியுள்ளன. கட்சிக்குள், சாதாரண நிலையிலிருப்போர் 'தவறுகள்' செய்தால் தட்டிக் கேட்கலாம் — ஒழுங்கு நடவடிக்கை யெடுக்கலாம். ஒழித்துக் கட்டலாம். நேரு சொல்கிறாரே, பெரிய தலைவர்களே இப்படியிருப்பதாக! அவர்களை என்ன செய்ய முடியும்!!

"மெயில்" தருகிறது, ஒரு சேதி: — மந்திரிகளை நியமிக்கும் விஷயத்தில்கூட, நேருவின் ஆசைகள், தூக்கி எறியப்பட்டுவிடுகின்றனவாம். ஆசாத் மறைந்ததும், அந்த இடத்துக்கு ஒரு பெரியவர் வேண்டுமென்பதால் டாக்டர் ராதாகிருஷ்ணனை நியமிக்க வேண்டும் என்றாராம். டில்லியிலிருக்கும் அவருடைய சகாக்கள் மனம் ஒப்பவில்லையாம்.

மந்திரிகளின் நியமனங்களில் மட்டுமல்ல, உபதேர்தல்களில் போட்டியிட ஆட்களைத் தேர்ந்தெடுப்பதிலும் நேருவின் ஆசையை, காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு, உதறித் தள்ளி வருகிறதாம். ஐக்கிய மாகாணத்தில் நடைபெற்ற ஒரு உபதேர்தலில், ஒரு பிரபல காங்கிரஸ்காரரைப் போட நேரு விரும்பவில்லையாம்! அவரையும் மீறிப்போட்டு பலத்த தோல்வியைக் கண்டது, காங்கிரஸ்!!

பல கலாச்சாரங்களையும், பலவித இனத்தவர்களையும் கொண்ட இந்திய உபகண்டம் "ஒரே நாடாக' இருக்கவேண்டுமெனில், ஓரளவுக்காவது விட்டுக்கொடுத்துப் போகவேண்டும் என்று நேரு விரும்புகிறாராம். அதனாலேயே, அண்மையில் கேரளத்துக்கு வந்தபோதுகூட, நடப்பது ஒரு உபதேர்தல் என்றாலும், கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சிக் கயிறு ஒட்டிக்கொண்டிருக்கிறது என்று தெரிந்தும், பெருந்தன்மையோடு வந்துபோயிருக்கிறார், நேரு. அதேபோல, இந்தி விஷயத்திலும் சமரசத்தோடு, தெற்குக்கும் வடக்குக்கும் இடையிலே ஒரு நல்ல சூழ்நிலையை விரும்புகிறாராம் நேரு. ஆனால், ஐக்கிய மாகாணம்—பம்பாயைச் சேர்ந்த 'பெரிய தலைகள்' அவருடைய இந்தப் போக்கை விரும்பவில்லையாம்! காங்கிரஸ் கட்சிக்குள் பணம் பெருத்தோர் அடியெடுத்து வைத்திருக்கிறார்கள் — அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகச் சில 'பெரிய தலை'களும் ஆகியிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, பல 'பெரிய தலை'கள், "சுதந்திரம்" என்கிற ஒரே காரணத்துக்காகக் காங்கிரசில் தியாகம் புரியுமளவுக்கு வந்தார்களே ஒழிய, நேரு அளவுக்குப் பொருளாதாரத் துறையிலும் சமூக அமைப்பிலும் "முற்போக்கு" ஏற்படுவதை விரும்பாதவர்களாகும்! சோஷியலிசம் என்று பேசிக்கொண்டு நேரு அவர்கள் செல்லுகின்ற பாதை, இந்தக் குழுவுக்கு அதிகம் பிடிக்கவில்லை — ஆதலால் நேருவை மீறவும், கடிவாளம் போடவும் முற்பட்டுவிட்டார்கள்!!

இந்தப் 'பெரிய தலை'களின் ஆதிக்கம், டில்லி மந்திரி சபையிலேயே அதிகமாகி இருப்பதாகத் தெரிகிறது. மொரார்ஜி தேசாய், பண்டித பந்து போன்றோர், டில்லி பீடத்தில் அமர்த்தப்பட்ட பிறகு, இந்தச் சூழ்நிலை வளர்பிறையாகியே வருகிறதாகவும் கூறப்படுகிறது.

**மந்திரி சபையில் மட்டுமின்றி, காங்கிரஸ் மத்திய போர்டிலும், இப்படிப்பட்டவர்களே வலிவும் செல்வாக்கும் பெற்றுள்ளனராம்.**

நேருவின் மனவேதனைக்கு இதுவே முக்கிய காரணம்! நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகள், ஐந்தாண்டுத் திட்டம், ஆகியவைகளைச் சமாளிப்பதைவிட, இந்தக் "கூட்டத்தை" சமாளிப்பதே பெரிய தலைவலியாகி வருகிறதாம் நேருவுக்கு!!

பேராசிரியர் குமாயூன்கபீர் என்பார், நேருவே நீடிக்கவேண்டும் என்று தெரிவிக்கையில், "நேரு அவர்களே! உங்கள் விருப்பம்போல், எதையும் செய்யுங்கள். வேண்டுமானால், இப்போதுள்ள மந்திரி சபையை நீக்கிவிட்டு, உங்களுக்குப் பிடித்தமானவர்களைச் சேர்த்தாலும் எங்களுக்குச் சம்மதம்," என்று பேசியிருக்கிறார். இப்போதுள்ள மந்திரிகளை நீக்கி, பிடித்தமானவர்களைச் சேருங்கள்—என்பதனை குமாயூன்கபீர் போன்ற பேராசிரியரே வெளியிடுகிறாரென்றால், நேருவுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் அளவும் வேதனையும் விளங்கும்.

இந்தக் கட்டமே, ஒவ்வொரு மாநிலத்தையும் தமது 'ராஜதந்திர மூலம்' கைவசம் வைத்திருப்பதாகும்-நேருவுக்குப் பிறகு, இவர்கள்தான் இந்திய உபகண்டத்தின் ஆசானாக விளங்கப்போகிறவர்கள். அப்போது, எப்படி காங்கிரசின் எதிர்காலமும், ஆட்சிப் பீடத்தின் அழகும் இருக்குமோ, யாமறியோம்!!

ஒன்றுமட்டும் விளங்குகிறது—இப்போது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது — இன்றுள்ள காங்கிரஸ், நேருவைத்தான் நம்பியுள்ளது! இன்று உள்ள 'டில்லி' யும் நேருவால்தான் வாழ்கிறது!!

ஆர்வமும் ஆசையுமிக்க அவர் நீண்ட நாள் வாழட்டும் — ஆனால், அவருக்குப் பிறகு!!

இந்தக் கேள்விக்கான பதிலையே, இந்த ஐந்து நாட்கள் தந்திருக்கின்றன — காங்கிரசும் சரி, அகில இந்திய ஐக்கியமும் சரி, அவருள்ளவரையில் தான்! பிறகு, வட்டாரங்களின் வாழ்வே முக்கியமாகும் — நாம் கேட்காவிடினும் கூட, ஒவ்வொரு வட்டாரமும் சுயேச்சை பெற்று ஆட்சி நடத்தும் — அநேகமாக நமது வாழ்நாளிலேயே, இந்தக் காட்சியைக் காணும்படி நேர்ந்தாலும் நேரலாம்!!

# ஒரு காதா!

இருபதாண்டுகள் இங்கிலாந்தின் ஆட்சி மன்றத்தில், இணையற்று ஒளி வீசிய புத்திசாலியான சர் இராபர்ட் வால்போல், ஆரம்பத்தில் துரைத்தனத்தில் கீழ்ப் பதவியொன்றில் இருந்தார் என்ருல், நீங்கள் மிகவும் ஆச்சரியப் படுவீர்கள். ஐம்பத்து நான்கு வயது நிரம்பிய—சொன்ன சொல் தவருத ஜியார்ஜ் - லீவிஸ், டோரிகளின் எதிரிகளாம் விக்கட்சியினரின் ஒருமுகமான ஆதரவினுல், 'முதல் ஜியார்ஜ் மன்னர்' என்று பிரகடனஞ் செய்யப்பட்டார். அதுபோழ்து நாட்டின் செல்வத்தைப் பெருக்குதலேயே, தமது தலையாய நோக்கமாகக் கொண்டிருந்த வால்போல், கருவூலத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டு இருந்தார்.

வாழ்க்கையில் ஒரு உயர்நிலையை அடைதல் வேண்டும்; வரலாற்றில் முக்கிய இடம் பெறல் வேண்டும் என்று மனதிற்குள் ஒரு பெரிய திட்டம் வகுத்துக் கொண்டிருந்த வால்போல், மக்கள் புகழ் மாலை சூட்டத்தக்க சில பல நல்ல காரியங்களை அவ்வப்பொழுது செய்திடலானுர். அதன் பயனுய், இரண்டாவது முறையாகக் கருவூலத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். நாளடைவில் பார்லிமெண்டின் ஆதிக்கத்திலே, நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்த அவர், கஜானு முதலமைச்சராக 1729-ஆம் ஆண்டில் ஆனுர். பிறகு, அரசரிடம் தமக்கிருந்த அதிக செல்வாக்கையும், மக்களின் ஏகோபித்த ஆதரவினையும், நன்கு பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் படிப்படியாக உயரலானுர்.

இவருடைய ஆட்சிக் காலம் என்று, பிரிட்டிஷ் சரித்திரத்தில் வழங்கப்படும் இருபது ஆண்டுகளில், அப்படியொன்றும் குறிப்பிடத்தக்க சிறப்பான நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. அந்த இருபது ஆண்டுகளும், மிகச் சாதாரண ஆண்டுகளைப் போலவே, இருந்தன என்று செப்புகின்ருர்கள். 'சரித்திரம் இல்லாத ஒரு நாடு, சந்தோஷமான நாடு' என்ற கூற்றுக்குப் பொருத்தமாக, இவரின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடலாம். 'தூங்கும் நாய்கள் தூங்கிக்கொண்டே இருக்கட்டும்'—இது ஒரு ஆங்கிலப் பழமொழி. இந்தப பழமொழியால் பிரிட்டிஷ் சரித்திரத்தில், வால்போலின் ஆட்சிக் காலம் குறிக்கப்படும் என்று, வரலாற்று வல்லுநர்கள் வருணிக்கின்ருர்கள்.

**வி. ஆர். துரை**

சிக்கனப் பிரியரும் சுயநலத்தில் கெட்டிக்காரருமான வால்போலின், இயற்கைக் குணங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டுக் கனவான்களாக இருந்த பலருள், ஒருவராக இலங்கிய இந்தப் பேராசைக்காரருக்கு, நார்பக்கிலே பெருஞ்சொத்து இருந்தது. காட்டிற்குச் சென்று வேட்டையாடுதலில் களிப்படைவார். நல்ல கதைகள் என்ருல் உயிர். அஃதே போல் நல்ல சகவாசத்திலும் நல்ல சாப்பாட்டிலும், இவருக்கு விருப்பம் அதிகம். சுயநலத்தைத் தவிர வேறு எந்த இலட்சியமும், மனிதரின் செயல்களைத் தூண்ட வல்லதல்ல என்பது இவரின் சித்தாந்தம்.

பருத்த உடல் இருக்கும்; முகத்திலே தெம்பு இருக்கும்; உரத்த குரல் இருக்கும்; அத்துடன் பலத்த சிரிப்பு இருக்கும்—இவைகள்தான் நாட்டுக் கனவான்கள் என்பவர்களின் அடையாளங்களாகும். மேற்சொன்னவைகள் அனைத்தும், மற்றக் கனவான்களைப் போலவே வால்போலுக்கும் அமைந்திருந்தது. ஆனுலும், பலவகையில் இவருக்கும் அந்தக் கனவான்களுக்கும் வித்தியாசம் இருந்தது. எல்லாக் கனவான்களும் டோரிகளாக இருக்க, இவர் மட்டும் விக்காக இருந்தார். இஃதேபோல் மற்ருெரு விஷயத்திலும் இவர் தனித்து நின்ருர். வியாபாரத்தையும் பண விருத்திக்கான முயற்சிகளையும், கனவான்கள் என்போர் வேம்பென வெறுத்தார்கள்; கேவலமாகக் கருதினுர்கள். வால்போலோ அதனைக் கரும்பெனக் கருதினுர். அவற்றில் நிபுணராகவும் இலங்கினுர்.

முதலாம் ஜியார்ஜ் எட்டடிக் கோயிலுக்கு நிரந்தரமாகத் தூங்கச் சென்ருர். சமரசம் உலாவும் இடத்திற்குத் தந்தை சென்றதும், தனயன் இரண்டாம் ஜியார்ஜ் அரச முடியைப் பெற்ருர். அவர் பட்டத்திற்கு வந்ததும், ஒருவகையில் திறமை மிக்கவரான வால்போலை, வெற்றிகரமாக வீட்டிற்கு அனுப்பிவிட்டார். சில்லாண்டுகள் கழிந்தன. தன் தந்தையின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்த வால்போலை, இரண்டாம் ஜியார்ஜ் - திரும்பவும்

அமைச்சர் தொழிலுக்கு அலைத்துக்கொண்டார். இழந்த பதவியினை வால்போல் மீண்டும் பெற்ருர். முன்பிருந்ததைவிட அவர் தம் செல்வாக்கு மும்மடங்கு மேலும் ஒளி வீசலாயிற்று.

போர் என்ருல், தோள் தட்டிக் கொண்டு எழுபவர் இரண்டாம் ஜியார்ஜ். அரசருக்கும் அமைச்சர் வால்போலுக்கும், இந்த விஷயத்தில் தலைகீழ் விதமாக இருந்தது. போரின்கண் மன்னரை ஈடுபட விடாமல் இழுத்துப் பிடித்து நிறுத்திவைக்க, வால்போல் பெருஞ் சங்கடப்பட்டார். அரசியாரை மெதுவாகத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டார். தம்முடைய எண்ணம் ஈடேறவேண்டுமானல், மெல்ல இராணியிடம் செல்வார்; சாதுர்யமாக அவள் ஆமோதிக்கும் வண்ணம், செவியில் விஷயத்தை ஓதுவார். ஜியார்ஜ் மன்னரை ஆண்ட அவள், பக்குவமாக விஷயத்தை மன்னரின் செவியில் போட்டு, சம்மதம் பெற்றுவிடுவாள். கெட்டிக்காரியான அரசியிடம் சென்று, 1734-ஆம் ஆண்டின் முடிவில் வால்போல் இப்படிச் சொன்ருராம்:

" இராணியாரே, இந்த ஆண்டு நடந்து முடிந்த போரில், மாண்டு போய்விட்ட மக்கள் தொகை மட்டும் ஒரு இலட்சம் ஆகும். அந்த இலட்சம் பேர்களில் ஒரு இங்கிலாந்து ஆள் கூட இல்லை " என்று பெருமையாகக் கூறினுராம்.

நல்ல சில குணங்கள் அமைச்சர் வால்போலிடம் இருந்தாலும், அவர் ஒரு பதவிப் பித்தராக இருந்தார். அவர் தம் பதவியை எக்காரணத்தை முன்னிட்டும், பறிகொடுக்க ஒருபோதும் விரும்பியதில்லை. இந்தப் பேராசை இருந்ததனுல், மிகவும் இழிவாக அவர் நடந்துகொண்டார். தேர்தல் காலங்களில் அவர் நடந்து கொண்ட முறை, அவ்வளவு கேவலமாக இருந்தது. பலரும் தம்மை ஆதரிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, பார்லிமெண்டின் அங்கத்தினர்களுக்கும் மற்றவர்களுக்கும், அவ்வமயம் ஆட்சியின்கண் தமக்கிருந்த தனிப் பெரும் செல்வாக்கு முழுவதையும் பயன்படுத்தி, உத்தியோகங்களைத் தரும் செய்தார். வள்ளல்போல் பணத்தை நண்பருக்கும் உறவினருக்கும் வாரி வாரி இறைத்தார். ஒவ்வொரு ஓட்டையும் குறிப்பிட்ட தொகை கொடுத்து விலைக்கு வாங்கினுர்.

எத்தனை நாளைக்குத்தான் ஒரு மனிதன் இப்படி மக்களை ஏமாற்றிக்கொண்டு இருக்க முடியும்?

தாம் பதவியில் எக்காலத்தும், மக்கள் விரும்பாவிட்டாலும் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக, பதவிகளை வழங்கியும் பணத்தை அள்ளிக் கொடுத்தும், ஓட்டுக்கள் பெறுகின்ற 'நல்ல' பழக்கத்தை, ஆரம்பித்து வைத்த அரசியல் விவேகி டான்பி என்பவராகும். இரண்டாம் சார்லஸ் மன்னரின் ஆட்சிக் காலத்தில், இவர் அமைச்சராக இருந்தவர். ஆனுலும் வால்போல் இந்த விஷயத்தில், குருவையே மிஞ்சிவிட்டார் என்று சொன்னுல் அதில் தப்பொன்றும் இல்லை. சுயநலக்காரரான வால்போலைப் போன்று, அத்துணை வெளிப்படையாக, இந்த இழிவான வியாபாரத்தை அரசியலில் நடாத்தியவர்கள் வேறெவருமில்லை.

ஒரு நாள் பார்லமெண்ட் நடந்துகொண்டிருந்தது. சபையின்கண் வால்போலும் உட்கார்ந்து கொண்டுதான் இருந்தார். சில மெம்பர்கள் எழுந்து நின்று, அவரை மிகவும் காட்டமாகத் தாக்கிப் பேசி, அமைச்சர் வால்போலின்மீது அடுக்கடுக்காகக் குற்றம் சுமத்திஞர்கள். இருக்கை விட்டுத் திடீரென்று எழுந்து நின்று, தாக்கிப் பேசிய அங்கத்தினர்களை வால்போல் சொல்லால் சுட்டிக் காட்டி, 'இந்த மனிதர்க்கெல்லாம் ஒரு விலையுண்டு' என்று கூறினுராம். இதிலிருந்தே வால்போல் தமக்கென்று அரசியலில் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்த பாதையினை, மிகத் தெளிவாக நாம் எடை போட்டுக் கொள்ளலாம்.

பதவியென்னும் பெருங் காதலால் ஆட்கொள்ளப்பட்டிருந்த வால்போல், ஆட்சியிலிருந்த திறமைசாலிகளைத் தமக்கிருந்த அதிகார ஆணவத்தால், சமயம் வாய்க்கும் போதெல்லாம், மட்டந் தட்டிக்கொண்டே வந்தார். அரசியல் வாழ்க்கையில் ஆப்த நண்பர்களாக இருந்த, வில்லியம் பல்டினி போன்ற வித்தகருக்குக் கூட, அமைச்சர் குழுவில் ஒரு இடம் கொடுக்க, அவரின் உள்ளம் ஒருப்படவில்லை. எந்த ஒரு விஷயத்திலும் அளவுக்கு மீறிய அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருந்த வால்போலின்மீது வெறுப்புற்ற கார்ட்டரெட் என்ற திறமை மிக்க அமைச்சர், தமது பதவியை ராஜினுமாச் செய்து விட்டார். ஒரு அமைச்சரின் ஒழுங்கற்ற போக்கினைக் கண்டிக்கும் முகத்தான் மற்ெருரு அமைச்சர், தமது பதவியினை உதறிவிட்டார். அவரன்றோ அமைச்சர் டவுன்ஷெண்ட் பிரபு என்ற உறவினர், காலம் முழுவதும் வால்போலுடன் சண்டை செய்து கொண்டிருப்பதை விரும்பாது, அரசியல் வாழ்வுக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு, விவசாயத்தில் ஈடுபடலாஞர்.

இதிலிருந்து நமக்கொரு உண்மை கண்ணுடிபோல் புலனுகின்றது. புலமைமிக்க அறிஞர்க்கு அமைச்சர் குழுவில், வால்போல் இடங்கொடுக்க விரும்பவில்லை. தம்மை மிஞ்சி விடுவர்; தம் பேச்சைத் தட்டிக்கழித்து விடுவர்; என்பது காரணமாக இருக்கலாம். தம்முடைய விருப்பத்திற்கு ஏற்ப கை தூக்கும் பொம்மைகளையும், ஆமாம் போடும் ஆசாமிகளையும், சாதாரண அறிவு படைத்த இரண்டாந்தர மக்களையும்தான், அவர்தம் சகாக்களாக வைத்துக் கொண்டார். அதாவது இப்படியெல்லாம் அட்டகாசம் செய்து தம்முடைய பெருமைக்குத் தாமே குழி தோண்டிக் கொண்டார்.

இங்குள்ள ஒரு சிலர், வால்போலைச்சிறந்த ராஜதந்திரிஎன்று கூறலாம். ஏனென்ருல், அவரை விடக் கேவலமான 'வால்போல்கள்' தானே இன்றைய ஆட்சியில் எங்கும் மலிந்து இருக்கின்ருர்கள்.

வால்போலின் எதேச்சதிகாரமான போக்கிற்கு, ஒரு முற்றுப் புள்ளி வைக்கின்ற காலம், நெருங்கி விட்டது. ஆட்சியிலிருந்து வால்போலின் அதிகாரத்தால் துரத்தப்பட்டு, பதவி தராமல் விலக்கி வைக்கப்பட்டிருந்த, அனைவரும் ஒன்று கூடினுர்கள். பல்டினி முதற்கொண்டு பலரும் ஒருங்கு சேர்ந்து வால்போலின் ஆட்சியை எதிர்க்கலானுர்கள். அவரின் நெடுநாளைய

தோழரான பல்டினி, வால்போலின் ஆட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்து, அவரின் புகழினை அழிந்தொழியும்படி செய்வதற்காகவே, 'தி க்ராப்டஸ்மன்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகையில் வால்போலின் அரசியல் போக்கிற்கு, சரியான சாட்டை கொடுத்து வன்மையாகக் கண்டித்து எழுதினர். அவரது தனியாட்சிக்கு 'ராபினட்சி, என்று பெயர் சூட்டினர். மந்திரி வால்போல் நாட்டைமடைமையால்பாழ் படுத்துகின்றார் என்று அங்கிங்கெனாதபடி நாடெங்கும், ஓயாமல் பிரசார மழை பொழிந்தார். அவரின் முயற்சி திருவினையாக்காமலா போகும்?

அதுபோழ்து பார்லமெண்டிற்குப் புதிதாக வந்த அங்கத்தினர்கள், வால்போலைத் தாக்குவதையே தொழிலாகக் கொண்டார்கள். அவர்களில்முக்கியமானவர்களாக ஹென்றிபாக்ஸி, வில்லியம் பிட் ஆகிய இருவரையும் குறிப்பிடலாம். இவ்விரு இணையற்றவர்களின் இடைவிடாத தாக்குதலினால், அதுவரையில் வால்போலுக்குபார்லமெண்டில் இருந்த செல்வாக்கு, 'என்னைவிடு' என்று பறந்தோடலாயிற்று. அந்த இருவரும், அவர் தம் குழுவினரும் 'தேசாபிமானிகள்' என்று மக்களால்புகழப்பட்டார்கள். அதிலென்ன தவறு?

நாடகம் ஒன்று காமன்ஸ் சபையில் ஒரு சமயம் நடந்தது. அந்த நாடகத்தை ஏற்பாடு செய்தவர்கள், எதிர்ப்புக் கட்சியினர்; வால்போலின் எதிரிகள். அவர்கள் நாடகத்தில் வால்போலை ஒரு கோழையென்று மறை முகமாகத் தாக்கி நடித்தார்கள். அது மட்டும் அல்ல! ஒரு செவி இழந்த ஜென்கின்ஸ் என்ற கப்பல் தலைவரை, நாடகத்திடையே கொண்டு வந்து நிறுத்தினார்கள். அந்தக் கப்பல் தலைவர், ஸ்பானிஷ் டிண்டர்கள் தமது காதினை, அறுத்த வரலாற்றை மிகவும் உருக்கமாகக் கூறினர். சில ஆண்டுகளுக்குப் பகைவர்களால் அறுக்கப்பட்ட அந்தச் செவியினை, உப்பில் ஊறுகாய் போட்டுப் பத்திரமாக வைத்திருப்பதாகக் கூறி, இழந்த அந்தக் காதினையும் எடுத்துக் காட்டினர். அதைக் கண்டு நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அங்கத்தினர்கள் ஆவேசத்துடன் ஆர்ப்பரித்தார்கள். மக்கள் ஸ்பெயின்மீது, படையெடுக்க வேண்டும் என்று போர்க்குரல் எழுப்பினர்கள். இந்தஇக்கட்டான நேரத்தில் போரினையே விரும்பாத வால்போல், பொதுமக்களின் குரலுக்கு இணங்க வேண்டியவரானர். அப்படி இணங்காவிடில், தம் நிலை ஆபத்தாகப் போய் முடியும் என்பதை, அவர் நன்கு உணர்ந்திருந்தார். எந்த நோக்கத்தோடு எதிர்ப்புக்கட்சியினர், நாடகத்தை நடித்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறியது.

போரினைத் திறம்பட நடாத்தும் அனுபவம் இல்லாத வால்போல், ஸ்பெயின் மீது போர் தொடுத்தார். காது இழக்கப்பட்டதின் காரணமாகத் தொடுக்கப்பட்ட இந்தப் போர், '**காதுச் சண்டை**' எனப் பெயர் பெற்றது. போரின் ஆரம்பத்திலேயே அவர் ஒரு தோல்வி அடைந்தார். அடுத்தடுத்துத் தோல்விகள் பல வந்து அவரை அணைத்துக்கொண்டன. குதிரைச்சவாரி செய்யத்தெரியாதவன், புதிதாகக் குதிரை மீது ஏறிச் சவாரி செய்தால் என்ன ஆவான்? விடை எல்லோருக்கும் தெரிந்ததே!

இச்சமயத்தில் எதிரிகள் வால்போலைப் பழித்துப் பிரச்சாரம் செய்தார்கள். மக்களும் அவரைப் பற்றி மிகக் கேவலமாக நினைத்தார்கள். இப்படியொரு போரில் வால்போலை இறங்க வைத்து அவமானப்படச் செய்து, வீட்டிற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று, எதிர்பார்த்துக்கொண்டிருந்த எதிர்ப்புக் கட்சியினர் வெற்றி அடைந்தார்கள். 1741-ம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் வால்போலின் பேச்சு மக்கள் மத்தியில் எடுபடவில்லை. வால்போலை எதிர்த்து மும்முரமாகப் பிரச்சாரம் செய்தார்கள். அமைச்சர் பதவியினின்று வால்போல் எதிர்பார்த்தபடி விலகினர். நாட்டுப்புற வாழ்க்கையில் நாடாண்ட அவர் மறைந்தார். இது எல்லோரும் எதிர்பார்த்த முடிவுதான்.

ஒரு கப்பல் தலைவனின் செவியினை, மாற்றான் அறுத்துவிட்டான் என்பதற்காக, ஒரு பெரிய படையெடுப்பு இங்கிலாந்தில் நடந்தது. அந்தப் போருக்கே ஜென்கின்ஸ் **காதுச் சண்டை** என்று பெயரிடப்பட்டது.

இங்கே பல வகையிலும் தென்னாடு ஒரு சாரரால் சுரண்டப்படுகின்றது. தமிழனின் உரிமைகள் காலடியில் போட்டு மிதிக்கப் படுகின்றன. அவனுடைய இன்பத் தாய்மொழிக்கு ஊறு செய்யப்படுகின்றது. எனினும், ஏனோ வீரர்களின் வழித்தோன்றல்கள் விழித்தெழாமல், உறங்கியவண்ணம் உள்ளார்கள்.

பதவிப் பித்துக் கொண்டவர்களும், பணத்திற்கு ஓட்டு வாங்குகிறவர்களும், பொதுநலமிலாச் சுயநல வேட்டைக்காரர்களும், கடமையுணர்ச்சியும் நாட்டுப் பற்றும் அற்றவர்களுமான 'வால்போல்கள்' இங்கு மலிந்து இருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் அரசியலிலிருந்து துரத்திடும் நாள் என்நாளோ?

1741-ம் ஆண்டிற்கு முன்னால் நடந்த தேர்தலின்போதெல்லாம், மார்தட்டி முழங்கி எத்தனையோ இழிவான முறைகளைக்கையாண்டு மக்கள் தம் ஆதரவினைப் பெற்று எதிரிகளை முறியடித்து எக்காளமிட்டு வெற்றி உலா வந்தவர், 1741-ம் ஆண்டின் பொதுத் தேர்தலில் என்ன முயன்றும் ஏமாற்றம் அடைந்து, மக்களால் கைவிடப்பட்டு, மற்றவர்களாலும் தூற்றப்பட்டு, மாயமாய் எங்கோ மறைந்த வால்போலின், 'பெருமைமிக்க' சரித்திரத்தை ஒருமுறை எண்ணிப் பார்ப்பது, அதிகார ஆணவ உச்சியில் என்றென்றைக்கும் தாமே இருத்தல் வேண்டும் என்று எண்ணும் எவருக்கும் ஒரு நல்ல பாடமாக அமையும்.

ஆண்கள் மரங்கள்; பெண்கள் அந்த மரத்தை ஆதாரமாகத் தழுவிக்கொண்டு அதனைச் சுற்றி இருக்கும் கொடிகள்; குழந்தைகள் அந்தக் கொடிகளில் கூத்தாடும் மண மலர்கள்.

# இன்றும் ஏன் பூத்தாயோ?

[ கோவிற்பட்டியான் ]

நேற்றுவரை மகிழ்ச்சியாக இருந்தார்; மன நிறைவோடு இருந்தார், ஆனால் இன்று? உள்ளத்திலே உவகையில்லை, நடையிலே சோர்வு, பார்வையிலே பரிதாபம், உடலும் உள்ளமும் சோர அவர் அந்த வீட்டு வாயிலை அடைகிறார்; உள்ளே செல்லக் காலெடுத்துவைத்தார்; ஆனால் திடீரென்று அவர் கண்களில் தென்பட்ட ஒரு காட்சி அவர் உள்ளேசெல்வதைத்தடைசெய்து அவரைச் சிந்தனையில் ஈடுபட வைத்துவிட்டது.

வெற்றிப் பெருமிதத்துடன் பூக்களைப் பூத்துக்கொட்டி நிற்கும் முல்லைக் கொடிதான் அவரை தடுத்து நிறுத்திவிட்டது. வெண்ணிறப் பூக்கள் நிறைய மலர்ந்திருந்தன. மனதில் இன்ப எண்ணங்களைக் கிளறிவிடும் இக்காட்சியைக் கண்ட அவர் — குடவாயில் நல்லாதனார் — என்ன செய்திருப்பார்? நாம் நினைப்போம் 'மனம் மகிழ்ச்சியுறும் பாடலைப் பாடியிருப்பார் என்று. இல்லை; பாடினார், ஆனால் அந்தப் பாடலிலே இன்பம் தரக்கூடிய நிகழ்ச்சி இல்லை. துன்பத்தின் சாயல்தான் தெரிந்தது. மகிழ்ச்சியூட்டும் வகையில் அந்த முல்லைப் பூ மலர்ந்திருக்கவில்லையே?

இன்று இவ்வளவு செழிப்புடன் படர்ந்திருக்கும் இந்த முல்லைக் கொடியின் வளர்ப்புக்குக் காரணமானவரோ ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன். அவர் ஒரு பெரும் வள்ளல். தன்னை நாடி வரும் மாந்தர்பால் மட்டும் தன் வள்ளல் தன்மையைக் காட்டுவதில்லை. தாவரங்களிடத்திலும் ஏனைய உயிரினங்களிடத்திலும் காட்டினார். தன்னுடைய வீட்டு வாயிலின் முன்பு படர்ந்திருந்த முல்லைக் கொடிக்கு நாள் தோறும் நீர் ஊற்றி வளர்த்தார். நாள் தோறும் அம் முல்லைக் கொடியின் செழிப்பை— சிறப்பைப்பற்றியே எண்ணினார். வள்ளல் எவ்வாறு பாகுபாடின்றி வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கினாரோ, அதே போன்று அவரால் பேணி வளர்க்கப்பட்ட முல்லைக் கொடியும் தன்னை நாடி வருபவர்க்கெல்லாம் மலர்களைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. ஆண்மைத் திறனும் அழகிய வனப்பும் வாய்ந்தவர்கள், கற்றறிந்த புலவர்கள், பாடும் கவிஞர்கள், முதலியோருக்கெல்லாம் பயன்பட்டது; அதுமட்டுமல்ல, பக்கத்து வீட்டிலுள்ள இள நங்கைகள் தங்கள் பூப்போன்ற வளையலணிந்த கரங்களில் அப்பூக்களைக் கொய்து கொண்டு செல்வார்கள்; யாழ்ஏந்தி வரும் பாணர்கள் தங்கள் யாழ் நுனியில் வைப்பதற்காகப்பூக்களை எடுத்துக்கொள்வார்கள். பாணர்களோடு வரும் பாடினிகளோ தங்கள் கார்மேகம் போன்ற கூந்தலுக்கு முல்லைப் பூக்களைச் சரமாகத் தொடுத்துவைத்துக் கொள்வார்கள். இத்தகைய சிறப்புக்களால் பயன்தரும் முல்லைக் கொடியைப் பார்த்த புலவர் சிலையாய் நிற்கக் காரணம்? அவர் சிந்தனையில் தோன்றியதுதான் என்ன?

இந்த முல்லைக் கொடியின் வள்ளல் தன்மைக்கு காரணமாக இருந்த அந்த மாபெரும் வள்ளல் நேற்றுத்தான் இயற்கை எய்தினார். வீரர்களைப்போல் காட்சியளிக்கவேண்டிய இளைஞர்கள் அவர் பிரிவால் கோழைகள்போல் சோகமே உருவாகியிருக்கின்றனர். ஒண்கொடி மாதர்களையோ காணவில்லை. வள்ளல் இல்லாத காரணமாகயிருக்கலாமோ? பாணர்களின் யாழுக்கும் வேலையில்லை; முல்லைப் பூவுக்கும் அவசியமில்லை. பாடினிகள் தங்கள் கார் குழலுக்கு பூ வைத்துக்கொள்ள வேண்டுமேயென்று எண்ணவில்லை. எப்படி எண்ணுவர்? எல்லோரும் கண்கலங்கித் தவிக்கின்றனர் வள்ளலின் பிரிவு குறித்து. முல்லைப்பூவால் இன்று ஒருவருக்கும் உபயோகமில்லை-எல்லோரும்-அவர் உதவி பெற்ற—எல்லோரும் துக்கத்தில் மூழ்கியிருக்க இந்த முல்லைக்கொடி மட்டும் ஏன் துக்கத்தின் சாயல் கூட இன்றிப் பூத்துக் கொட்டியிருக்கிறது. இன்று ஒரு நாள் அந்த மாபெரும் வள்ளல் மறைந்ததின் அறிகுறியாகவாவது பூக்காமல் இருந்திருக்கலாம்!

புலவரின் சிந்தனையில் எழுந்த உணர்ச்சி பாடலாக வெளிப்பட்டது. புறநானூற்றில் அப்பாட்டைக் காண்போம்

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"

★

தங்களைப் பொதுமக்களோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளுவதன் மூலந்தான், பொதுமக்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளியிடுவதன் மூலம்தான், பொதுமக்களின் விருப்பங்களை உண்மையாகப் பிரதிபலிப்பதன் மூலந்தான், எழுத்தாளர்கள் தலைசிறந்த நூல்களை இயற்ற முடியும். அவர்கள் தங்களைப் பொதுமக்களின் எஜமானர்களென்று கருதிக் கொண்டார்களானால், அவர்களால் பொதுமக்களுக்கு நன்மை எதுவும் ஏற்படாது என்பது மட்டுமல்ல, அவர்கள் கல்வித்திறம் எவ்வளவு மேதாவிலாசம் பொருந்தியதாயிருந்தாலும் சரி, அவர்கள் நூல்களுக்கும் எதிர்காலம் இல்லாது போய்விடும்.

# தூக்கமா உறக்கமா

—[மா. கி. தசரதன்]—

நமது வாழ்க்கையில் நாம் மிகுதியாய்ச் செய்கின்ற வேலை எது? யாராவது கணக்கெடுத்திருக்கின்றீர்களா? சிலர் சாப்பிடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள்; வேறு சிலர் வேறு பலவற்றைத் தொழிலாகக் கொண்டவர்கள். இத்தனைபேரும் சேர்ந்து செய்யும் பெருந்தொழில் ஒன்று இருக்கிறது. அந்தத் தொழிலைத்தான் நாம் நமது வாழ்க்கையில் மிகுதியாகச் செய்கின்றோம். அவ்வளவு பெரிய தொழில் என்னவாக இருக்கும். கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.

வேறு ஒன்றுமில்லை: தூக்கம் தான் அந்தத் தொழில்! நமது வாழ்க்கையில் பெரும் பங்கு பெறுவது இந்தத் தூக்கம். தூக்கம் உடலுக்கு ஓய்வு தருகின்றது என்பதையும், உழைப்பில் செலவான ஆற்றலைப் பெற உதவுகின்றது என்பதையும் விஞ்ஞானிகள் நமக்கு உணர்த்துகின்றனர். விஞ்ஞானிகள் உணர்த்துவதை ஒப்புக்கொள்ளுகின்றோமோ இல்லையோ, நமக்கே தெரிகின்றது, களைப்பாக இருக்கின்றபோது 'ஒரு சின்னத் தூக்கம் போட்டால்' எல்லாம் சரியாகப் போகிறதைக் காணுகின்றோம்.

இரவில்தான் தூங்கவேண்டும் என்பது கட்டாயம் இல்லை. எப்போது கண்ணைச் செருகுகின்றதோ, எப்போது வாய் பெருங் காற்றை உள்ளிழுத்து விடுகின்றதோ அப்போது கையையேனும் தலைக்கு அணையாக்கிக்கொண்டு தூங்கிவிடலாம். காலையில் தூங்கலாம்; மாலையில் தூங்கலாம்; இரவிலும் தூங்கலாம். சாப்பிட்டவுடன் சிலருக்குக் கட்டாயம் சற்று நேரம் கண்ணை மூடியாக வேண்டும்.

தூக்கத்திற்குத் துணை செய்வது எது? இன்னதுதான் என்று சொல்லமுடியாது. எவ்வளவோ கருவிகள் துணையாகின்றன. கோரைப்பாயிலிருந்து இலவம் பஞ்சு மெத்தைவரை இதற்குப் பயன்படுகின்றது. இந்தக் காலத்தில் காற்றடைத்த பைகள் பாயாகவும் தலையணையாகவும் வந்திருக்கின்றன. பழங்காலத்தில் நிரம்ப வசதியானவர்கள் மயில்களின் தூவி (சிறகு)களால் படுக்கை ஆக்கிக்கொண்டனர் என்று சொல்லப்படுகின்றது. அரசகுமரிகளின் படுக்கைகளின்மீது மலர் தூவப்பெற்றிருக்குமாம்! அந்த மலர் இதழ்களுடன் சின்னஞ்சிறு பூவின் காம்பு கலந்திருந்துவிட்டால் அன்றைக்கெல்லாம் அவர்கள் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுப்பாராம். பொழுது புலர்ந்ததும் மலர் கொணர்ந்த தோழிக்கு வாழ்த்துக்கு மாறாக வசவு காத்துக் கிடக்குமாம்.

நல்ல கட்டில், நுரைபோன்ற படுக்கை மட்டும் இருந்தால் போதுமா, உறக்கம் வர? பொல்லாத உறக்கம் மெல்ல வீசும் காற்றின் துணையையும் கேட்கிறது!

எல்லாம் இருந்தும் தூக்கம் வராமல் துயரப்படுகின்றவர்கள் கோடிக் கணக்கில் இருக்கின்றார்கள். அந்தக் கோடிக் கணக்கான பேர்களில் எத்தனைபேர் எத்தனை வகைக் காரணங்களால் தூக்கம் வராமல் கிடக்கின்றனர்.

அதோ அந்தக் குடிசையில் ஒரு ஏழை விவசாயி நோயினால் நலிந்து உறங்காமல் வாடுகின்றான்; அவன் பக்கத்தில் அவன் மீது அன்பைச் சொரிந்திடும் அவன் துணைவி 'என்ன ஆகுமோ' என்ற கவலையோடு நிலை குலைந்திருக்கின்றாள்.

இதோ இந்தத் தெருக் கோடியில் தெரிகின்றதே மாடி வீடு, அதில் கூடத்தான் இருவர்—கணவன் மனைவியர்—தூங்காமல் விழித்திருக்கின்றனர். நோயும் நொடியும் வந்து நொந்துபோய் அவர்கள் தூங்காமல் இல்லை. காதல் கதை பேசிக்கொண்டும் கண் விழித்துக் கிடக்கவில்லை. கணவன் எந்நேரத்தில் எழுந்து எங்கே போய்விடுவானோ என்ற அச்சத்தில் அவள் விழித்திருக்கின்றாள், அவள் தூங்கிவிட்டாளா என்பதைத் தெரிந்து கொண்டு வெளியில் 'உலா'போகலாம் என்று அவன் தூங்காமல் இரவைக் கழித்துக்கொண்டிருக்கின்றான். இத்தனைக்கும் மேலாக புதையல் எங்கே பறிபோய் விடுமோ என்ற கவலையும் அவர்கள் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கிறது.

போலீஸ்காரர்களில் சிலரும் போக்கிரிகளில் பலரும் கூட தூக்கமின்றித்தான் இரவைக் கழிக்கின்றனர்.

இப்படிப் பலபேர் தூக்கமில்லாமல் கிடக்கின்றபோது, உழைத்து அலுத்தவன் தூக்கத்தின் அணைப்பில் தன்னை மறந்து தூங்குகின்றான். உழைத்தவனுக்குக் கட்டிலும் இல்லை; அதன் மீது கனத்த மெத்தையும் இல்லை; அதில் வேறு எதுவும் இல்லை. என்றாலும் உழைப்பு அவனைத் தட்டி உறங்கவைக்கின்றது. நீட்டிப் படுக்கவும் இந்த நீள் நிலத்தில் இடமின்றி முடங்கிக்கிடக்கும் ஏழையர் எத்தனைபேர்!

இழுக்கும் ரிக்ஷாவில், ஓட்டும் வண்டியில், நடக்கும் பாதையில் கையும் காலும் சேர்த்து இணைத்துக்கொண்டு சுருண்டுவிட்டால் அவர்கள் உலகை மறந்துவிடுகின்றனர்.

எப்படியோ ஒன்று, தூங்கியாக வேண்டும். இல்லையானால் உடலுக்குக் கெடுதி என்பதை அநுப

வம் உணர்த்துகின்றது. 'என்ன கண்கள் சிவந்திருக்கின்றனவே?' என்று உங்கள் நண்பரைக் கேளுங்கள். என்ன சொல்கிறார் அவர். 'இரவெல்லாம் தூங்கவே இல்லை ஐயா, அதுதான்' என்கிறார் அவர்.

தூக்கம் இவ்வளவு நல்லது ஆயிற்றே என்று இன்னும் கொஞ்ச நேரம் தூங்கிப் பாருங்கள். என்ன பரிசு பெறுகின்றீர்கள் பார்க்கலாம்!

சிரமமில்லாமல் உங்களுக்கு ஒரு பட்டப் பெயர் 'தூங்கு மூஞ்சி' என்று கிடைத்துவிடும். பொல்லாத உலகம்தான் இது! உடம்புக்கு நல்லது என்று இன்னும் கொஞ்ச நேரம் தூங்கினாலும் இதற்குப் பொறுக்கவில்லையே! என்னவென்றுசொல்வது? வேறு என்னசெய்வது, போர்வையை உதறிவிட்டு எழுந்திருக்க வேண்டியதுதான், அது என்ன அவ்வளவு இலகுவில் முடிகின்ற செயலா? கடைசி நேரத்தில்தான் எழ இயலாதவாறு தூக்கம் நம்மை இழுத்துப் பிடிக்கிறது. அதன் பிடிப்பிலிருந்து விடுவித்துக்கொள்ளத் தானே என்னவோ தூங்கி எழுந்ததும் கையையும் காலையும் நீட்டி நெட்டி முறித்து எழுந்து நிற்பது?

மனிதனுக்கும் விலங்கிற்கும் இருக்கின்ற தலையாய வேறுபாடு தூக்கத்திலும் இருக்கிறது என்கின்றனர். மனிதன் தவிரப் பிற விலங்குகள் அனைத்தும் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை என்கின்றனர். மனிதனின் பெருமை நம்பிக்கையான தூக்கத்தில் இருக்கிறது என்கிறார்கள்.

வல்லவனுக்குப் புல்லும் ஒரு கருவியாகிவிடும் என்பது பழமொழி. தமிழன் வல்லவன். அதனால் புல்லிய தூக்கத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு அரிய உண்மைகளைப் பெற வைத்துவிட்டான்.

தூக்கம் என்பதை கண்மூடி நினைவற்றுக் கிடப்பது என்ற பொருளிலே மட்டும் இல்லாமல், கருத்திழந்து, செயல் மறந்து கிடக்கும் நிலையையும் உணர்த்தப் பயன்படுத்திய பெருமை தமிழுக்கு இருக்கிறது.

'தூங்கியவன் தொடையில் திரித்தவரையில் போதும்' என்று அறிவுறுத்தி இருக்கின்றனர்.

திருவள்ளுவர் சின்னச் சின்னப் பொருள்களை வைத்துக் கொண்டு பெரிய பெரிய உண்மைகளைக் காட்டுவதில் வல்லவர்க்கு வல்லவராயிற்றே! அவர்களை விட்டுத் தூக்கம் எப்படி அகன்று இருக்கும்? அந்தத் தூக்கத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு அருமையான கருத்து ஒன்று சொல்கிறார் பார்ப்போம்:

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை

காலந்தாழ்த்துச் செய்ய வேண்டிய வேலைகளை நீட்டித்துச் செய்வாயாக; விரைவாகச் செய்ய வேண்டியதை உடனே செய்து விடு; ஒத்திப்போடாதே என்கிறார். நாளைக்கு வரும் இரயிலுக்கு இன்றைக்கே போய்க் காத்திருக்காதே; இன்றைக்குக் காணவேண்டிய நண்பரை நாளைக்குக் காணலாம் என்றும் தள்ளிப்போடாதே என்பது அனுபவ உரையன்றோ?

பிறப்பு இறப்புப் பற்றிய பேருண்மைகளையும் வள்ளுவர் தூக்கத்தைக் கொண்டே துலக்கிடுகின்றார். சாவு சாவு என்கிறார்களே என்ன அது; ஒன்றுமில்லை; உறங்குவதுபோலத்தான்; பிறப்பு என்பது என்ன? தூங்கி எழுதல் போல என்கிறார். இதில் உண்மை இருக்கிறதா என்று ஆராய்வதை விட, வாழுகின்ற மனிதனின் மனதில் நம்பிக்கை ஊட்டுவதில் எவ்வளவு திறமையாகச் செயல்படுகின்றார் என்பதைக் கண்டு வியக்க வேண்டியவர்களாகின்றோம்.

தமிழ் இலக்கியங்களில் தூக்கத்தைப் பற்றிய பல குறிப்புகள் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன.

ஊர் உறங்கும்போது விழித்திருந்து, கூடும் காதலர்க்கு நாய் உறங்காமையும், தாய் உறங்காமையும் எத்துணை இடர்ப்பாடு தருகின்றன என்பதனைப் படிக்கின்றபோது அந்தக் காதலர்கள் மீது நமக்கு இரக்கம் எழுகின்றது. என்ன செய்வது, நாம் உதவிக்குப் போகலாம் எனின் நாம் விழித்திருப்பது தெரிந்தால் அந்தக் காதலர்க்கு இன்னும் 'வெட்கமாகப்' போகுமே! அதனால் நாமும் தூங்காமல் தூங்கிச் சுகம் பெற வேண்டியதுதான்.

தூங்காமல் தூங்குவது என்றால் என்ன என்று யார்க்கும் கேட்கத் தோன்றுது. ஏன் எனில் நாம் எல்லோரும் ஏதாவது ஒரு நேரத்தில் தூங்காமல் தூங்குகிறவர்கள் தான.

சின்ன வயதில் மருந்துடன் வந்து நம்மை எழுப்பிய தாயைக் கண்டு தூங்குவதுபோலத் திரும்பிப் படுத்துக்கொண்டோம்; படிக்கிற வயதில் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று எண்ணினால் உடனே நோய் வந்ததுபோல் படுக்கையிலேயே கிடந்து தூங்குகின்றோம். நம்முடைய நண்பர்கள் நாம் தூங்கும்போது என்ன பேசுகின்றார்கள் என்பதைத் 'தூங்குவது'போல இருந்து கேட்கின்றோம். வேண்டாதவர் நம்மைப் பார்க்க வந்தால், பார்க்க விரும்பவில்லை என்று சொல்லாமல்

நிழல்—அது தூய்மையானது; மாசற்றது; அமைதி நிறைந்தது; கறைப்படுத்த முடியாதது. பாம்பின் நிழலிலே நஞ்சிருப்பதில்லை; புலியின் நிழலிலே அதன் கொடூரப் பசியில்லை; வெறுக்கத்தக்க புரோகிதனின் நிழலிலே அவனது இழிதன்மை—சுரண்டும் பண்பு இல்லை; கோயிலின் நிழலிலே அதனுள்ளே நிகழும் அக்கிரமக் களங்கமில்லை; பாசாங்கு பக்தனது நிழலின் நெற்றி, அவனது பட்டை நாமம்—திருநீறு—சாதிக் குறி—இவைகளின் களங்கத்தை உதறி எறிந்துவிடுகிறது. நிழல், எவ்வளவு பெருவியப்பான பொருள்!

'இழுத்துப் போர்த்திக்கொண்டு' 'தூங்கு'கின்றோம்.

இப்படி எங்கும் எதிலும் கை கொடுக்கும் தூக்கம் நம்மைக் கை விட்டு வேடிக்கை பார்க்கும் இடங் களும் இருக்கின்றன.

வகுப்பில் மாணவனும் தூங்கு கின்றான்; ஆசிரியரும் மெல்லத் தலையாட்டுகின்றார். அலுவலகத் தில் தலைமையிடத்தில் இருப்பவர் தனியறையில் தூங்கினால், வாயில் காப்போன் வாயிலிலும், மற்றவர் கள் அவரவர்கள் இடங்களிலும் 'ஓய்வு' எடுத்துக் கொள்ளுகின் றனர். எல்லோருக்கும் மேலதி காரி வந்துவிட்டால் அவரவர்கள் யார் யாரை எழுப்ப வேண்டுமோ அந்த நியதியின் படி எழுப்புகின் றனர்!

செய்துமுடிக்கவேண்டிய செயல் ஒன்று முன்நிற்கும்போது 'இரவு பகல் பாராமல்' தூக்கத்தை மறந் தால்தான் செயல் முடிகின்றது. நெப்போலியன் போர்க்களத்தி லேயே சிலமணி நேரங்கள் மட்டுமே தூங்குவான் என்று வரலாற்றுக் குறிப்புச் சொல்கிறது. பழைய தமிழ்ப்பாட்டு 'கருமமே கண்ணாயி னார்' 'கண் துஞ்சார்' என்று தூக் கத்தைத் துரத்துகின்றது.

தூக்கத்திற்கு ஒரு பெரிய தடைக்கல் இருக்கிறது. ஓயாமல் பாடிக்கொண்டுவரும் கொசுவின் தொல்லை அல்ல; தேடிக் கடிக்கும் மூட்டைப் பூச்சியின் தொல்லையும் அல்ல. கனவுகள் இருக்கின்ற னவே, அவைதான் தூக்கத்தைக் கெடுக்கும் நச்சரவுகள்!

இனியகனவானாலும் இன்னுறக் கத்தைக் கலைத்துவிட்டுத்தான் போகின்றது; அச்சந் தரும் கன வாயினும் அதுவே முடிவாகிறது.

முறிந்துவிழும் மரத்தின் கீழ் நசுங்கிவிட்டதாகக் கனவு காணும் நாம் விழித்துப்பார்த்தால் கட்டிலி லிருந்து பொத்தென்று கீழே வீழ்ந்துகிடக்கின்றோம்; நம்மீது தலையணைகள் இரண்டொன்று கிடக்கின்றன. காதலியின் கன்னத் தைத் தடவுவதாகக் கனவு கண்டு விழித்துப் பார்த்தால் கட்டிலின் கால்களைத்தான் நம் கை தேய்த் துக் கொண்டிருக்கும். பொல்லாத கனவுகள் — தூக்கத்தைக் கெடுக் கும் வெடி மருந்துகள்!

தூக்கம், தூக்கம் என்கிறேனே, தூக்கம் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? தூக்கம் என்றா லும் உறக்கம் என்றாலும் ஒன்று தானா? இன்று அப்படித்தான் சொல்லுகின்றோம். பையன் தூங்கி விட்டான்; பையன் உறங்கிவிட் டான்; என்று இரண்டு வாக்கியத் திலும் ஒரே பொருள் காணுகின் றோம் இன்று; ஆனால் தமிழ் இலக்கியத்தில் அப்படி இல்லை!

தூக்கம் என்று இன்று நாம் சொல்வதை அவர்கள் உறக்கம் என்றுதான், சொன்னார்கள். ஆனால் தூக்கம் என்ற சொல் அப்போது இல்லையா எனின் இருந்தது. இருந்தால் என்ன பொருளில் வழங்கியது?

தொங்குதல் என்ற பொருளில் வழங்கியது. புறநானூற்றில் இருபத்திரண்டாம் பாடலில் ஒரு யானையைப்பற்றிப் பாடும்போது,

'தூங்கு கையால் ஓங்கு நடைய'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. தூங்கும் கையையும் ஓங்கும் நடையை யும் உடையது என்று சொல்லப் படுகின்றது.

யானையின் கை துதிக்கை; அது தொங்குகின்றது; உறங்கவில்லை. அதனால் தொங்குதல் என்ற பொருளில்தான் தூங்குதல் என்ற சொல் பயன்படுகின்றது.

தூக்கணாங்குருவி என்று அழைக்கின்றோமே, ஏன்? மற்றப் பறவைகளின் கூடுகள் போல் இன்றி, அந்தக் குருவியின் கூடு தொங்குகின்றது, தூங்குகின்றது, அதனால் தூக்கணாங்குருவி என்று அதைச் சொல்கிறோம். 'தூங் கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன்' என்ற தொடரிலும் தூங்கும் எயில், உறங்கும் கோட்டை என்று பொருள் கொள் ளாமல் தொங்கும் கோட்டை என்று சொல்கிறோம்.

தூங்குதல் என்பது தொங்கு தல்; ஆனால் ஏன் உறங்குதலுக்கு அந்தச்சொல்லைக் கையாண்டனர். ஏதாவது காரணம் இருக்கவேண் டும் அல்லவா? டாக்டர் மு. வ. அவர்கள் எங்கட்குக் குறுந் தொகை வகுப்பில் சொன்ன கார ணம் பொருத்தமாகத் தோன்று கின்றது.

மனிதன் நிற்கின்றபோது, நடக்கின்றபோது, உட்காரு கின்றபோது நிலைத்திருக்கின் றான். ஆனால் உறங்கும் போதோ எந்த நிலையிலும் இல்லாமல், இப்படியும் அப் படியுமாக அலைந்து கொண் டிருக்கின்றான். அவன் அலை வதும் தொங்குவதும் ஒன்றாக இருந்ததை நோக்கிய யாரோ முதன் முதலில் உறக்கத்திற் குப் பதில் தூக்கத்தைப் பயன் படுத்தியிருக்கவேண் டும். இதிலே உங்களுக்கு ஐயம் இருந்தால் ஓடும் பஸ் ஸில் தூங்குகின்றவர்களைப் பாருங்கள், அவர்கள் ஆடி அசைந்து தொங்கிக்கொண் டிருப்பது போல் தோன்று கின்றார்கள்"

என்று நகைச்சுவையைக் கலந்து ஊட்டினார்.

தூக்கமோ உறக்கமோ, எந்தப் பெயரிட்டழைத்தாலும் ரோஜா வின்மணம்மாறாததைப்போல்அதன் மயக்கம் இருக்கிறது. உங்களுக்கு அந்த மயக்கம் கண்ணைச் செருகு கின்றதை நானும் இதோ 'தூக்க கலக்கத்தில்' பார்த்துவிட்டேனே! இன்னுமா எழுதிக்கொண்டிருப் பேன்; பேசாமல் படுத்துத் தூங்க வேண்டியதுதான்; இல்லை இல்லை உறங்கவேண்டியதுதான்!

★

பெண் என்பவள் பலமற்ற வள். வாழ்க்கை யென்னும் கொந்தளிக்கும் கடலில் அவள் தன்னந்தனியாகப் பிரயாணம் செய்யமுடியாது. அவளுக்கு உணவும் உடையும் சுகமும் கொடுத்து ஆதரிக்க, அவளிடம் அன்பு செலுத்தி, அவளது சுக துக்கங்களைத் தன் சொந்தச் சுக துக்கங்களாகப் பாவிக்க, பயங் கள் இன்னல்களிலிருந்தெல்லாம் அவளைப் பாதுகாக்க, தேவை ஏற்படும்போதெல்லாம் அவ ளுக்கு ஆறுதல் தர, ஒரு ஆண் மகன் அவசியமாகிறான். அவனது அந்த உதவிகளுக்குப் பதிலாக இளமைக் களஞ்சிய மாய் விளங்கும் தன்னையே அவள் பரிசாக அளிக்கிறாள்.

# பாலிபியஸ் (கி. மு. 204-122)

—[கோ. கோதண்டராமன்]—

கிரேக்க ஆசிரியரான பாலிபியஸ் என்பாரின் பெயரும் புகழும் பெரும்பாலும் ரோம் நாட்டு வரலாற்றினையே ஒட்டியது என்னலாம். அரசு பற்றிய அவரது சீரிய ஆராய்ச்சி முடிவுகள், ரோம் நாட்டு அரசியல் அமைப்பை, அவர் தனது சிந்தனை உரைகல்லில் தேய்த்து உத்தரவாதமுள்ளவை என்று தெளிந்தபின் உலகுக்கு அளித்தவை என்பர் அரசியல் வித்தகர்கள்.

அகேயன்லீகின் இருப்பிடமாக மிளிர்ந்த ஆர்கேடிய நாட்டைச் சேர்ந்த "மெகலோபாலிஸ்" என்ற இடத்தில் பாலிபியஸ் தோன்றினார். மாசிடோனிய ஆதிக்கத்தை விரட்டி, கிரேக்க நாட்டை ரோம் சாம்ராஜ்யத்தின் ஆளுகையின் கீழ்க்கொண்டு வந்த ரோமானியப் படையெடுப்பின்போது, அகேயன் லீகின் திட்டங்களை உருவாக்கிய அரச தந்திரிகள் பலருள் பாலிபியசும் ஒருவர். மேற்கூறிய படையெடுப்பின்போது, அவர் மிதவாதிக் கட்சியைச் சார்ந்திருந்தார். இந்த மிதவாதக் கட்சி, ரோம் நாட்டைப் பொறுத்தவரை ஒரு எதிர்மறைக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. இந்தப் படையெடுபபின் இறுதியில் ரோமர்களே வெற்றிபெற்றனர். இவ்வெற்றி காரணமாக அகேயன் லீகைச் சேர்ந்த மாபெருந் தலைவர்கள், அதே லீக்கைச் சார்ந்த— ரோம் நாட்டு ஆட்சியை ஆதரித்த ஒரு சில உறுப்பினர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு, ரோம் அரசாங்கத்தின் கைதிகளாயினர். அந்தத் தலைவர்கள் ரோம்நாட்டு அரசாங்கத்தால் வெறும் பெயரளவுக்குக் கைதிகள் என்று கருதப்பட்டார்களே தவிர, உண்மையில் அவர்கள் ரோம் நகரத்தில் மிகுந்த மரியாதையுடனேயே நடத்தப்பட்டார்கள்.

இத்தாலிநாட்டில், பாலிபியசின் திறமையும், அநுபவமும் உணரப்பட்டுநன்கு பயன்படுத்தப்பட்டன. ரோமாபுரிக்கும் அகேயர்களுக்குமிடையில் நல்லுறவை வளர்க்கும் சமாதானத் தூதுவராக அவர் கிரீசுக்கு அனுப்பப்பட்டார். பாலிபியசின் சமாதானத் தூது முதலில் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லையென்றாலும், சின்னாட்களில், அவர் கிரேக்க நாட்டுப் புனருத்தாரண வேலையைக் கவனிக்கும் பொருட்டு, ரோமானிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இதற்குப் பின், பாலிபியஸ் தனது எஞ்சிய வாழ்நாட்களைக் கலை, கல்வித் துறைகளில் செலவழித்தார். அக்காலத்தில் சிறந்த அரச தந்திரியாக விளங்கிய "இளைய சிபியோ ஆப்பிரிக்கானஸ்" என்பாரின் ஆதரவும் நட்பும் பாலிபியசுக்குக் கிடைத்தது. இந்த அரிய நல்வாய்ப்பினை அவர் ரோம்நாட்டு வரலாற்றுக் குறிப்புக்களையும் ஆதாரங்களையும் திரட்டுவதற்குச் சுற்றுப்பயணம் செய்து நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

அவரது மேற்குறித்த சுற்றுப் பயணத்தின் நோக்கங்கள் கீழ்க்கண்டவைகளாகும். ஒன்று, ரோம் சாம்ராஜ்யத்தின்சீரையும்சிறப்பையும் விளக்குவது. இரண்டாவது ரோம் சாம்ராஜ்யம், உலக வல்லரசாகத் திகழ்வதற்குக் காரணமாக இருந்த இரண்டாவது பியூனிக் யுத்தத்தில் இருந்து மாசிடோனிய வெற்றிவரை உள்ள நிகழ்ச்சிகளைத்தொகுத்து வரலாறு எழுதுவது. மூன்றாவது, ரோமாபுரியின் ஆதிக்கம் எவ்வாறு அதன் விரிந்து பரந்த சாம்ராஜ்யத்தில் செவ்வனே செலுத்தப்பட்டு வந்தது என்பதை விளக்குவது. இவ்வாறு தனது பிறநாட்டுச் சுற்றுப் பயணத்தின் மூலம் நேரில்காண நேரிட்ட ஆட்சிமுறைகளைப் பற்றிய அநுபவத்தையும், ஆங்காங்கு திரட்டிய அரசியல் குறிப்புக்களையும் துணைக்கொண்டு பாலிபியஸ் எழுதியுள்ள வரலாற்றுச் சுவடிகளுள் முதல் ஐந்து நூல்கள் முழு வடிவத்திலும் ஏனைய முப்பத்தைந்து நூல்கள் சிதறுண்ட துண்டுகளாகவும் நமக்குக் கிடைத்துள்ளன. தனது ஆறுவது புத்தகத்தின் ஒரு பகுதியில் பாலிபியஸ் அரசாங்கத்தைப் பற்றிய சில அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார். இந்நூலின் முக்கிய நோக்கம், அரசாங்க அமைப்பின் எந்தக் கூறுகள், ரோம் நாடு ஓர் பரந்த சாம்ராஜ்யத்தை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்தன என்பதை விளக்குவதுதான் என்று கூறுப்படுகிறது. இந்நூலில் பாலிபியஸ், அரசியல் சமூகத்தின் தோற்றத்தையும், அது எவ்வாறு நாளுக்கு நாள் ஒரு புரட்சிகரமான மாறுதலுக்கு (அதாவது வேறுபட்ட ஆறுவகை நல்ல அல்லது கெட்ட முறைகளைக்கொண்ட சுழற்சியின் மூலம்) உட்படுகிறது என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். இந்த அடிப்படையின் பேரிலேயே அவர் ரோமானியக் குடியரசின் அரசியலமைப்பை அலசி ஆராய்ந்திருக்கிறார். சுருங்கக் கூறின், மூன்று நல்ல முறைகளின் கூட்டுறவின் மூலம் ரோம் சாம்ராஜ்யம் கலப்படமான ஓர் அரசியல் அமைப்பைக் கொண்டு சக்திவாய்ந்த வல்லரசாகத் திகழ்ந்தது, திகழ முடிந்தது எனும் உண்மையைப்புலப்படுத்துவதே பாலிபியசின் நூல்களின் நோக்கமாகும்.

கிரேக்க நாட்டு மண்ணிலே பிறந்து, ரோமாபுரியில் வாழ்ந்து, ரோமாபுரியின் வரலாற்றையும், அவ்வரலாற்றின் அடிப்படையில் அரிய அரசியல் கருத்துக்களையும் உலகுக்கு வழங்கி, வான்புகழ் பெற்ற அரசியல் ஞானிதான் பாலிபியஸ்! வாழ்க அவர்தம் நாமம்! வளர்க அவரது புகழ்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

பெருமையைப்பற்றிப் பேசுவார்களே ஒழிய, அஜந்தாவின் அழியா ஓவியங்களைக் கருதார், எல்லோராவின் எழிலைவிட 'ஈப்ஸ்டின்' சிற்பங்களையே வியந்து பேசுவர், கதகளியைப்பற்றியும் பரதநாட்டியத்தைப்பற்றியும் அறியார். ஆனல் வால்ட்ஸ், டாங்கோ நடனத்தைப் பற்றி நன்ருகச் சொல்லுவார்கள்.

அலிகார் பல்கலைக் கழக மாணவனுக இருந்தபொழுது, "கதகளி" என்ருல், 'கலா ஆசர்' என்று சொல்லப்படும் வியாதியைப் போன்ற இன்னெரு வியாதியாக்கும் என்று நானே கருதியிருந்ததுண்டு! நான் மட்டுமல்ல, பலர் அப்படித்தான் எண்ணியிருக்கக் கூடும்!!

நமது கலாச்சாரம்பற்றிய பொது அறிவு மிகமிக மோசம், வெட்கப்பட வேண்டிய ஒன்று என்ருலும் தென்னுட்டு வாழ்க்கை — கலை— இலக்கியம் — சிற்பம் பற்றி வடநாட்டிலிருக்கும் சராசரி மனிதனுக்கும் "தெரியாது" என்பது, திடுக்கிடவைக்கும். மேலே சொன்னேனே கல்லூரி மாணவன், அவன் எவ்வளவோ மேல்! அவனையும்மிஞ்சக்கூடியவர்கள் வடக்கிலுண்டு!!

*

பிரிந்துபோகவேண்டும் என்று கழகத்தவரும், "நாம் தமிழர்" என்போரும் கூறுவதை நான் ஏற்கமாட்டேன். (பாகிஸ்தான் கேட்ட முஸ்லீம் லீக்கைப்போல இவர்கள். பாகிஸ்தான் கோரிக்கையால், நமது நாடு துண்டாடும்படி ஏற்பட்டதன் விளைவுகளை அனைவரும் அறிவோம்.) ஆனல், என்ன காரணத்தால் "வடக்கு தெற்கு" போராட்டம் நடத்துமளவுக்குக் குரோதம் ஏற்பட்டுள்ளது என்பதை என்னல் புரிந்து கொள்ள முடிகிறது.

வட இந்தியாவிலுள்ள மிகப் படித்தவர்களுக்குக்கூட, சாதாரண விஷயமான கதகளியைப் பற்றியோ பரதநாட்டியத்தைப் பற்றியோ, தெரியாது; பாரதியும் வள்ளத்தோலும் அவர்களுக்குத் தெரியாது; மதுரைக் கோயிலின் அழகையும் சோமநாதபுரத்தின் கவர்ச்சியையும் பற்றி அவர்கள் அறியார்கள்; எம். எஸ். சுப்புலட்சுமி; யார் என்பது பற்றியோ; ருக்குமணி அருண்டேலைப் பற்றியோ, வடக்கேயிருக்கிறவர்கள் அறியார்கள். தமிழிலும் தெலுங்கிலும் உள்ள, சிறப்பும் புகழும் மிக்கப் புராதன இலக்கியங்களையும் சரி, வளரும் இலக்கியம் பற்றியும் சரி அவர்களுக்கு ஒரு துளியும் தெரியாது. மலையாளத்தில் வளர்ந்து வரும் சிறுகதை இலக்கியம் பற்றி, அறியார். இந்திய மொழிகளிலே வெளிவரும் இலக்கிய—கதை — ஏடுகளில் புகழும் பெருமையும் மிக்க ஏடுகள் தமிழிலே வெளியிடப்படுகின்றன என்பதோ புரட்சிகரமான நாடகங்களும் கவிதைகளும் தெலுங்கிலே தீட்டப்படுகின்றன என்பதோ அவர்களுக்குத் தெரியாது. தென்னுட்டவருக்கு, இசையின் மீதுள்ள ஆர்வம் எத்தனை என்பதையும், எம். எஸ். சுப்புலட்சுமி செய்யும் ஒரு கச்சேரிக்கு அரை இலட்சம் வசூலாகுமென்பதையும், அந்த வசூலையும் அந்தப் பாடகி ஏதாவது ஒரு நல்ல காரியத்துக்குக் கொடுத்துவிடுகிருர் என்பதையும் பற்றி யாரும் வடக்கில் அறிய மாட்டார்கள்! நுண்கலை மிக்க நாட்டியத்திலும், இசையிலும், தெற்கிலுள்ள ஒவ்வொருவரும் நல்ல ரசிகர்கள் என்பதைக்கூட அவர்கள் அறியார்கள். கலையை ரசிப்பதில் வடக்கில் வாழ்வோரை விடத்தெற்கேயிருக்கும் சாதாரண ஆள்கூடத் தேர்ந்தவர்கள் என்று சொன்னுல், வடக்கே யிருப்பவர்கள் நம்ப மறுப்பார்கள்.

தென்னிந்தியர்களைப் போற்றிப் புகழவேண்டுமென்பதற்காக இதையெல்லாம் நான் சொல்லவில்லை! தங்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துக்கொண்டு வாழும் குணம் அவர்களிடமும் இருக்கலாம். ஆனல், வடஇந்தியர்கள் அளவுக்கு அவர்கள், இருள் படிந்தவர்களாக இல்லை. இலட்சக்கணக்கான தென்னிந்தியர்கள், காலிப்பைப் பற்றியும் இக்பால்யார் என்பது குறித்தும், பிமேம்சந்தைக் குறித்தும் சுமித்ரானந்தன் பந்தைப் பற்றியும், ஜோஷைப் பற்றியும் கிருஷ்ண சந்தரைக் குறித்தும், இஸ்மத் அகதியின் பெயரையும் ராஜிந்தர் சிங்பேடியின் திறமையையும் கேட்டிருக்கமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நான், இதை எழுதும் காரணம் எவர்மீதும் குற்றம் சொல்வதற்காக அல்ல. வடக்குக்கும் தெற்குக்கும் இடையே இன்னும் நெருங்கிய, விரிந்த, கலாச்சாரத் தொடர்புகள் இருக்கவேண்டுமென்பதையே வலியுறுத்த விரும்புகிறேன்.

அகில உலகத்துடனும் தொடர்பு கொள்ள வேண்டுமெனும் பேரார்வத்தோடு இப்போது பல இயக்கங்களை, நாம் வைத்திருக்கிரேம்-இந்தோ சோவியத் கலாச்சாரக்குழு, இந்தோ சின நட்புறவுக் கழகம் என்பதுபோல, இந்தியாவின் பல பகுதிகளிலிருக்கும் கலாச்சாரங்களுக்கும் மொழிகளுக்குமிடையே நட்புறவை வளர்க்கும், இப்படி ஒரு குழுவை ஏற்படுத்தவேண்டும். தெற்கு வடக்கு கலாச்சாரசங்கம் என்றிருந்தால் என்ன?

வடக்குக்கும் தெற்குக்கும் தொடர்பு ஏற்பட, பழங்காலத்தில் விந்தியமலை குறுக்கேயிருந்தது. இப்போது, இரயிலும், பாதைகளும் வடக்கையும் தெற்கையும் இணைத்துவிட்டிருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக ஐக்கியமும் மலர்ந்து தென்னிந்திய ராதாகிருஷ்ணனும், வடஇந்திய நேருவும் சேர்ந்து பங்கு ஏற்கும் நிலையும் உள்ளது. விந்தியத்தைத் தாண்டும் ஆகாய விமானங்கள், உள்ளன. காலையில் தேநீர் சாப்பிட்டுவிட்டு,டில்லியைவிட்டுக் கிளம்பினுல் மத்தியான சாப்பாட்டுக்கு சென்னையைச் சேர்ந்து விடலாம்,

ஆனல், கலாச்சாரத் துறையிலோ, "விந்தியம்" இன்னும் உள்ளது. தெரியாமை, குரோதம், தனித்த நிலை எனும் "விந்தியத்தை" இருதரப்பாரும் கடக்க வேண்டும். வடக்கும் தெற்கும் ஒன்ருேடொன்று தொடர்புபெற வேண்டும்."

★

மே, 10, 11 தேதிகளில்

திருவாரூர் மாநாடு

வருக! வருக!!

வரவேற்புக்குழு.

# எண்ணம் சரி! ....செயல்?....

"ஒத்துழைப்போர் சங்கம் ஒன்று வைக்கப்போகிறேன்..."

"அதென்ன சங்கம்?"

"பலருழைக்கவும் ஒருவன் உண்டு கொழுக்கவும், பணக்காரன் எனச் சிலரும் பாட்டாளிகள் எனப் பலரும் இருப்பது தீது, எல்லோரும் வாழவேண்டும் என்று பேசப்படுகிறதல்லவா? அதை நடத்திக்காட்டப் போகிறேன்!"

"இதுதான், அச் சங்கத்தின் கொள்கையா?"

"ஆமாம்! ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக்கொண்டு, அரிசியிருப்போருக்கு ஆடையும், ஆடை வைத்திருப்போருக்கு அரிசியும், இப்படி ஒருவர்க்கொருவர் இல்லாததைப் பரிமாறிக்கொண்டுவாழும் ஒரு அமைப்பை உருவாக்க ஆசைப்படுகிறேன்..."

"அதெப்படி முடியும்?"

"ஏன் முடியாது! ஒரு வீட்டில் நாலு பேர் அண்ணன் தம்பிகள். ஒருவனுக்கு விவசாயம், இன்னொருவனுக்கு வியாபாரம், வேறொருவன் விஞ்ஞானி, மற்றொருவனுக்கு ஆலைத் தொழில், இவர்களனைவரும் தத்தமது தொழிலின்மூலம் கிடைப்பதை வீட்டுக்குக்கொண்டு வருகிறார்கள். விவசாயி, அரிசி தருகிறான்! வியாபாரி, மிஞ்சிய அரிசியை விற்று, வேண்டிய பொருள்களைக் கொண்டுவரும் துறையிலிருக்கிறான்! விஞ்ஞானி ரேடியோ போன்றவைகளைச் செய்தளிக்கிறான்! ஆலைத் தொழிலாளி நெய்தவைகளைக் கொண்டுவருகிறான்! அப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கொண்டுவந்து அந்த வீட்டில் போட்டால், யாருக்கு என்ன கவலை?"

"அதெப்படி முடியும்? நீ சொல்வதைப்பார்த்தால், அந்தக் குடும்பம் பணக்காரக் குடும்பமாக வன்றோ இருக்கவேண்டும்? அப்போதுதானே, சொந்தத்தில் ஆலை வைத்திருக்கவும், சொந்தத்தில் ரேடியோ செய்யவும், சொந்தத்தில் வாணிபம் நடாத்தவும்—விவசாயம் செய்யவும் முடியும்?"

"உண்மைதான்! ஒரு குடும்பம் என்று வரும்போது, இக்கேள்வி எழும். ஆனால், சமூகமே இந்தக் குடும்பமாக மாறினால், அந்தச் சமூகத்தின் உழைப்பு இவ்வண்ணம் பங்கிடப்பட்டால், அங்கே விளையும் வளத்தை அனைவரும் பங்கிட்டுக்கொண்டு வாழ்ந்தால்.."

"கேட்க, இனிக்கிறது! முடியுமா?"

"முடியுமா! என்று முயற்சிக்காமலே கேட்டால் எப்படி? முயற்சித்துப் பார்ப்போம்!!"

**அண்ணல்**

"எப்படி முயற்சிப்பாய்? உன் கொள்கையை நாடெங்கும் ஒவ்வொரு நாளும் எடுத்துச்சொல்லப் போகிறாயா? அப்படிச்சொல்லி, உன் வழிக்கு மக்களையும், மக்களை ஆளும் அரசாங்கத்தையும், அவ்வளவு எளிதில் திருப்பிவிட முடியுமா?"

"நான், பேசப்போவதில்லை. ஒரு 'மாடல்' வைக்கப்போகிறேன். ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே சிலரைச் சேர்த்து, ஒரு 'காலனி' நிறுவி, அந்தக் காலனிக்குள் இதையெல்லாம் செய்துகாட்டப் போகிறேன்."

"அதற்கு வசதி உண்டா உன்னிடம்?"

"இல்லை!"

"பிறகு...?"

"என் திட்டத்தைக் கேள்விப்பட்டு இந்தளவுக்கு உதவி செய்ய ஒருசிலராவது வராமலா போவார்கள்? எதெதற்கோ பணத்தை அள்ளியிறைக்கும் பணக்காரர்களில் ஓரிருவருக்காவது என் திட்டம் பிடிக்காமலா போகும்? மனித சமூகத்துக்குப் புதியதோர் அமைப்பைத் தரும், எனக்கு உதவாமலா போவார்கள்?"

"அப்படிப்பட்டவர்கள் யார் எனத் தேடிக் கண்டுபிடித்து உதவிப்பெறபோகிறாயா..."

"நான் போகப்போவதில்லை. வீட்டு வாசலில், ஒவ்வோர் நாளும் காத்திருக்கப்போகிறேன்--இப்படி ஒரு காலனியை ஏற்படுத்த யாராவது ஒரு பணக்காரர் வலுவில் என்னிடம் வந்தேதீருவார்!!"

* * *

ஒரு நாள், இருநாளல்ல; பன்னிரண்டு ஆண்டுகள், வீட்டு வாசலிலேயே காத்துக்கிடந்தானும்! யார் வருவார்கள்? பிரபுக்களுக்கு இது தானா வேலை? பிரியவல்லிகளைத் தேடுவதிலும், பெரும் பிரபுவாக என்ன செய்யலாம் என்பதிலும் கவனம் ஓடுமே ஒழிய, பிறர் வாழ்வதைப் பற்றியும் பெரும்பாலானோரின் பிரச்னைகள் தீர்க்கப்படும் முறைகளைப் பற்றியும் என்ன கவலை அவர்களுக்கு? யாரும், வரவில்லை! கடைசியில், ஏமாற்றத்தோடேயே, அவன் இறந்தான்!!

அவன் இறந்த பிறகு, அவன் சொன்ன கொள்கைகளின் மீது சிலருக்குப் பற்றுதல் உண்டா

யிற்று. அவன் விருப்பம்போல், காலனிகளை உருவாக்கி, நடத்தினர். ஆனால், அப்போதிருந்த பிரான்சின் சூழ்நிலையில் இந்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. ஏனெனில், நவீன எண்ணங்கள் மலராத காலம் அது! 18-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் என்றால் கேட்கவேண்டுமா!!

“சக்திக்கேற்றபடி உழைக்கவேண்டும். தேவைக்கேற்றவாறு வாழ வேண்டும்” என்கிற உன்னதக் கொள்கையை சோஷியலிசம் — சமதர்மம் என்கிறோம்!! இந்த உத்தம நெறி, உலகில் மனிதன்படும் ஒவ்வொரு கஷ்டத்தையும் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்த எவருக்கும் ஏற்படாமலில்லை. நமது நாட்டில் வாழ்ந்த சித்தர்களும் ஜீவன் முக்தர்களும், “இப்படியேன் மனிதன் கஷ்டப்படுகிறான்?” எனும் கேள்வியை எழுப்பி, “அது அவன் தலைவிதி. ஆண்டவன் செயல்” என்று சொல்லிவிட்டார்கள். இப்படிச் சொல்வோர், பிரான்சு போன்ற இடங்களில் இருந்தும் கூட, மனித சாதியின் தீராத பிரச்னைகளைத் தீர்த்துவைக்க புதுப்புது யோசனைகள், அப்போதைக்கப்போது பூக்காமலில்லை.

**சார்லஸ் போரியர், சொன்ன ஒத்துழைப்போர் சங்கக் கொள்கையில் குறிப்பிடக்கூடிய ஒன்று 28-வயதுக்குமேல் யாரும் உழைக்கக்கூடாது என்று சொன்னதாகும்.**

ஒவ்வொரு மனிதனும் 28-வயதோடு 'ரிடயர்' ஆகிவிட வேண்டும், என்று சொன்னான். அதற்கு மேல், அவன் உழைக்கக்கூடாது. அவனது தேவைகளை, 'காலனி'யிலிருப்போர், கவனித்துக் கொள்ளவேண்டும் என்பது அவன் கருத்து.

சாகும் வரையில் உழைக்கும் மனிதர்களிருக்கிறார்கள்! உழைப்பின் காரணமாகச் சாவோரும் இருக்கிறார்கள்!! இதற்கா, மனிதன் பிறந்தான்?—என்று கேள்வி எழுப்பினான், போரியர்.

மனிதன், இதற்கா பிறந்தான்? —சிந்தித்தால், மனிதன், உழைத்து உழைத்து உயிரை விடப் பிறக்கவில்லை, வாழத்தான் பிறந்தான் என்பது தென்படும். வாழ்வது என்றால் என்ன? தேவைக்கேற்ற வசதிகளைப் பெற்று, மனிதன் உயிரோடிருப்பது எனலாம்! தேவைக்கேற்ற வசதிகளை, அவன் பாடுபடாவிட்டால் யார் தருவார்கள்? “காலனி” தரும் என்றான் போரியர்! 28-வயதுக்குட்பட்டவர்கள் பலர் இருப்பார்களல்லவா, வாலிபப் பருவமல்லவா அது, அப்போது பாடுபடக் கூடியவர்களால் கிடைக்கும் பலனை அனைவரும் பகிர்ந்து வாழ வேண்டும் என்று சொன்னான்.

இயந்திரம்போல உழைத்துழைத்துச் சாகாமல், ஒரு கட்டம் வந்ததும் மனிதன் அந்த உழைப்பிலிருந்து 'ரிடயர்ட்' ஆகிவிடவேண்டும், அவனது தேவைகளை, அவன் விட்ட இடத்துக்கு வருவோர் பங்கிட்டு நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று சொன்னான்.

அவன் சொன்ன 28-வயது என்பதில் வேண்டுமானால் கருத்து வேற்றுமை இருக்கலாமே ஒழிய, உலகிலுள்ள எந்த அரசும், உழைத்தவனுக்கு ஓய்வு கிடைக்க வேண்டும் என்பதை மறுக்கவில்லை. நமது நாட்டில்கூட அரசாங்க அலுவல்களிலிருப்போருக்கு 55-வயது வந்தால் விலகிவிடவேண்டும் என்கிற முறையிருக்கிறது.

சர்க்காரிலும், சர்க்கார் சம்பந்தப்பட்ட துறைகளிலும் இந்த முறை உள்ளதே ஒழிய—சாதாரண விவசாயிக்கும், வியாபாரி போன்றோருக்கும் இந்தக் கட்டுப்பாடு உண்டோ எனின், கிடையாது! விவசாயிக்கு, வேலைசெய்தால் தான் கூலிகிடைக்கும்—இட்லி சுட்டுவிற்கும் கிழவி, காலையில் அடுப்பை மூட்டினால்தான், சில அணாக்களையாவது பார்க்க முடியும்.

குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு “ஓய்வு” பெறும் அரசாங்க அதிகாரிகளில் கூட, தள்ளாத வயதிலும் ஏதாவது வேலைகிடைக்காதா, கிடைத்தால் செய்யலாமே என்கிற ஆசையோடு, அலைவோர் ஏராளம் உண்டு.

**காரணம், மனிதனின் தேவைகளைப் பெற்றுத்தரவேண்டிய பொறுப்பு, எவரிடமும் இல்லை. அவனவனாகவே, பெற வேண்டியவனாயிருக்கிறான்.**

இது கூடாது என்பதால்தான், “ஒத்துழைப்போர் சங்கம்” வைத்து அதன்மூலம் 'காலனி' நடத்திப் பார்க்கவேண்டும் என்று கனவு கண்டான் போரியர்.

கனவு, அழகானது மட்டுமல்ல; ஆழ்ந்த மனிதத் தன்மையும் மிக்கதாகும்! ஆனால், அதை நடத்திப்பார்க்கப் பணம் படைத்த தர்ம தாதாக்களே, முன்வருவர் என்று எதிர் பார்த்தான். இயலாமலேயே செத்தான்.

*

'காலனி' அவன் விரும்பியது! அதுபோன்ற 'காலனி'யாக ஒரு நாடே இருக்கவேண்டும் என்றே, இன்று முற்போக்காளர்கள் கூறுகிறார்கள் !!

மனிதன் வாழ வேண்டும்—என்கிற ஆசையின் காரணமாகவே, முற்போக்காளர்கள், சக்திக்கேற்ற உழைப்பு வேண்டும்; தேவைக்கேற்ற வசதிகளை அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும், அது தான் சோஷியலிசம், என்கிறார்கள்.

இப்படிப்பட்ட சோஷியலிச முறையில்தான் எமது நாடு, முன்னேறி வருகிறது, என்று தெரிவிக்கும் ரஷ்யா, சீனாவும் உண்டு உலகில்.

28 வயதுக்கு மேல் மனிதன் எவ்வித கவலையுமற்று, தன் காலனியில் இருக்கவேண்டுமென்ற போரியரின் 'கனவு' அப்படியே பலிக்காவிடினும், இயலாதோருக்கு வசதிகளைத் தரும் வழிகள் ரஷ்யாவிலிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

உழைப்போருக்கு வாழ்வும், முதுமைக்காலத்தில் வசதிகளும், இயலாதோருக்கு உதவிகளும் தேடித் தரும் ஒரு அரசியல் ஏற்படவேண்டும் என்பதை, மனித குலத்தின் மாண்பு அறிந்தோர் அனைவரும் ஒப்பவே செய்வார்கள்.

அந்த நிலை, இந்திய உபகண்டத்தில் உள்ளதா எனின், இல்லை! ஆளும் நேரு அவர்களும், அவர் தம் கட்சியினரும் “சோஷியலிசமே எமது குறிக்கோள்”, என்று கூறிக்கொள்கிறார்களே ஒழிய, அந்தச் சோஷியலிசபாணியின் அம்சங்கள் ஏற்பட்டுள்ளனவா எனின், நிச்சயமாக இல்லை!!

ஏழு வயதில் ஏர் பிடித்த அஞ்சான் எழுபதாவது வயதிலும் அதே கதியில்தான் இருக்கிறான்; பதினைந்து வயதில் கணக்கெழுத

உட்கார்ந்த கர்த்தமுத்து வயது 80 ஆகியும் இன்னும் பெட்டியடியில்தான் இருக்கிறார், அறுபதைத் தாண்டிவிட்ட 'அம்மாமி' கூட அப்பளாம் வடாம் செய்தால் தினசரி ஆறணா எட்டணா கிடைக்காதா என்றுதான் உழைத்துக்கொண்டிருக்கிறார்.

போரியரின் பரந்த 'கனவு'க்கு இல்லாவிடினும், ரஷியா அளவுக்குக்கூட, மனித வாழ்க்கைக்குத் தரப்பட வேண்டிய மகத்துவ நிலை மலரவில்லை; அரும்புகூடத் தென்படும் அறிகுறியில்லை.

ஏன்?—என்பதற்கு நேரு அவர்கள் என்ன பதில் தருகிறார், தெரியுமா? கடந்த ஏப். 21-ந் தேதி புது டில்லியில் கூடிய காங்கிரஸ் சோஷியலிஸ்டுகள் கூட்டம் ஒன்றில் கூறுகிறார்:

"சமூகத்தின் சமுதாய பொருளாதாரச் சீர்கேடுகளைப் போக்கிட வேண்டியது அவசியம்தான். இந்த அவசியத்தை ஒரு பேராசிரியர் சுலபமாக உணர்ந்துகொள்ளலாம். ஆனால் ஒரு அரசியல் வாதிக்கு பலதரப்பட்ட தடைகள் உள்ளன. ஓட்டளிக்கும் மக்களின் உளப்பாங்கு இன்னும் வளர்ச்சியடையாதது. இந்தத் தடைகளுக்கு ஊன்றுகோலாயுள்ளது."

ஓட்டளிக்கும் மக்கள் வளர்ச்சியடையாததால், சோஷியலிசம் நாடிச் செல்லும் பாதையில் பலதரப்பட்ட தடைகள் உள்ளனவாம்!!

இப்படித் தெரிவித்ததன் மூலம், இன்னும் தடைகளைத் தாண்டிடும் நிலையில்தானில்லை என்று உணர்த்திவிட்டிருக்கிறார் நேரு. பேராசிரியர் புரிந்துகொள்ளலாம்—மக்கள், தெளிவு பெறவில்லையே என்கிறார்! அதனால், தடைகள் ஏற்படுகின்றனவேயென்கிறார்!!

அதுவும் பலதரப்பட்ட தடைகளாம்! அந்தத் தடைகளைத் தாண்ட வேண்டிய கட்டத்தில் அரசியல் வாதி இருக்கிறானாம்!!

"தடைகள் இருந்தாலென்ன? வெள்ளையனையே எதிர்த்த காங்கிரசா அஞ்சும்? ஒரே சட்டம்! தூள், தூளாக்கி சமதர்ம அரசை நிறுவுவோம்!!", என்று காங்கிரஸ்காரர்கள் கர்ச்சிப்பதுண்டு. நேரு அவர்கள், "அது உண்மை இல்லை—ஏனெனில், ஓட்டுப் போடுபவர்களிடம் தெளிவு இல்லை-காரணம்—தடைகள் உள்ளன", என்று ஒப்புக்கொள்கிறார்.

இந்தத் தடைகளைத் தவிடு பொடியாக்கும் தைரியமும் செல்வாக்கும் நேரு அவர்களுக்கா இல்லை? சமஸ்தானங்களைச் சாய்த்தோம் — ஜமீன்தார்களை ஒழித்தோம்—நிலப் பிரபுக்களை மடக்கினோம்—ஆலையரசர்கள் எங்களிடமிருந்து தப்ப முடியாது—என்றெல்லாம் பேசுகிறார்களே, அப்படிப்பட்டவர்களாலா இந்த 'பலதரப்பட்ட தடை'களைத் தாண்ட முடியாது?

நேரு, 'தடைகள்' என்கிறார்! டி. டி. கே. விலகுமுன், 'புலிகள்' என்றார்!!

தடைகள், புலிகள் எது என்று தெரிந்து கொள்ளவேண்டும், நாம். நேரு அறிவார். ஆயினும், மக்களின்மீது பழியைப் போடுகிறார், அதாவது மக்களுக்கு இன்னும் தெளிவு வாராததால் இந்தத் 'தடைகள்' நீடிக்கின்றன என்கிறார்.

தெளிவு பெறாமலில்லை, மக்கள்! தெளிவு இல்லாமலிருக்குமிடம் காங்கிரஸ்தான்!! ஏனெனில் அங்குதான், ஒரு பக்கத்தில் முதலாளிகள் வீற்றிருக்கிறார்கள்—இன்னொரு பக்கத்தில் சோஷியலிசம் பேசுகிறவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒருவர் ஒன்று பேசுகிறார், இன்னொருவர் வேறொன்று பேசுகிறார், குழப்பமும் கோளாறும் அங்குதான் கோலோச்சுகிறது. தெளிவு, அங்குதான் இல்லை.

* * *

பலதரப்பட்ட தடைகள், சோஷியலிசம் மலர, எங்கிருந்து முளைக்கும்? நிச்சயம் முதலாளிகளிடமிருந்துதான்!

அப்படிப்பட்ட ஒரு முதலாளியின் சுயநலத்தைக் கண்டபோதுதான் சார்லஸ் போரியருக்கு, வெறும் பிரச்சாரத்துக்குப்பதில் காரிய மூலம் எதாவது செய்து காட்டவேண்டுமெனும் ஆவல் பிறந்ததாம்.

வியாபாரியின் மகனாகப் பிறந்த போரியர், சிறுவயதில் வியாபார உலகின் நாடிகளாக விளங்கும் பிரபுக்களின் தில்லுமுல்லுகளைக் கண்ணாரக் கண்டான்! ஒரு வாடிக்கைக் காரரிடம் ஒரு சரக்கைப் பற்றிய உண்மையைச் சொன்னதற்காக அவருடைய அப்பாவே, அவனைப் போட்டு அடித்தாராம்!!

ஓம் சமயம், ஒரு பணக்காரர் அரிசியைப் பதுக்கி வைத்திருந்திருக்கிறார். நாட்டிலே, கொடும் பஞ்சம்; தலைவிரித் தாடிய சமயம் அது. மக்கள் திண்டாடத் திண்டாட, அவர் அரிசியைத் தாராளமாக விற்கவில்லை—கள்ள மார்க்கெட்டில் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்தார். அது, போரியருக்குப் புரியவில்லை கெட்டு மக்கிப் போயிற்றாம் இதனால். அதைக் கொண்டு போய் ஆற்றில் கொட்டிவிட்டு வரச்சொன்னாராம்! அப்போதுதான் போரியருக்கு, "முதலாளிகள், இலாபத்துக்காக எதுவும் செய்வார்கள். இதே அரிசியை, தவித்த மக்களுக்கு கொடுத்திருக்கலாமே! ஏன் கொடுக்கவில்லை" என்று கேள்வி எழுந்தது, இதயத்தில்.

பதிலும் பிறந்தது, நாட்டின் பொருள்கள் யாவும் ஒருவன் கைக்குப் போகாமல் தடுக்கப்பட்டு ஒரு பொதுக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டு, யாராருக்கு எப்படியெப்படிப் பகிர்ந்திடவேண்டுமோ, அவ்விதம் கொடுக்கப்படவேண்டும், என்று.

அரிசி மட்டுமின்றி, ஒவ்வொன்றும் இப்படியே செய்யப்படவேண்டும்—அதற்கு ஒரு காலனியை நாம் அமைத்துச் செய்துகாட்டுவோம் என்கிற முடிவுக்கு வந்தான் அவன்.

நல்ல எண்ணம்! நல்ல முடிவு!!-ஆனால், அந்தக் காலனிக்குப் பணம்! தான் யாரை எதிர்த்து இதைச் செய்யவேண்டுமென எண்ணினானோ அதே பணக்காரனிடமிருந்து கிடைக்குமென நம்பினான்.

அதேபோல, நேருவும், சோஷியலிச பாதையால் யார் பாதிக்கப்படுவார்களோ அந்த முதலாளிகள் மூலமே, ஒத்துழைப்பு கிடைக்குமெனக் கருதுகிறார்-காங்கிரசிலும் இடமளித்து வைத்திருக்கிறார். 'பலதரப்பட்ட தடை'கள், அங்கிருந்து கிளம்புகின்றன! மக்கள்மீது பழி போட்டுப் பயன் என்ன!!

★